Regd: No M. 5277. UDUMALAI BEERANGI. டேலிபோன் 2597

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்

உடுமலை பீரங்கி

ஆசிரியர் உடுமலை R. இரங்கநாதன்

வெடி 1.] 8-பக்கங்கள் சென்னை, சனிக்கிழமை 5-3-1949 விலை 1 அணா சிலோன் 10 சதம் [குண்டு 22

தீர்ப்பு — எப்படி?

—வை. இளமுருகன்—

குற்றம் செய்தவன் எவனாக இருந்த போதிலும் தக்கபடி விசாரித்து நியாயம் வழுவாது தீர்ப்பு அளிக்கவேண்டும். குலத்தின் காரணமாகவோ தொழிலின் காரணமாகவோ சலுகை காட்டக் கூடாது. ஒரு தராசில் சாமானை எடை போடும்போது 2 தட்டுகளும் சமமாக இருக்கச் செய்வதுபோல இருதரப்பிலுமுள்ள கருத்துக்களை அறிந்து சமநோக்குடன் தீர்ப்பு கூறவேண்டும். இதுதான் தமிழர் நெறியாகும். வள்ளுவனார் வகுத்த குறள்மொழியிலும் இதனைக் காணலாம்.

“சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல அமைந்து ஒருபால் கோடாமை சான்றோர்க்கு அணி.

ஆனால் ஹிந்து நெறி எனப்படும் ஆரியநெறியோ இதற்கு மாறுபட்டது. அதில் நேர்மைக்கும் உண்மைக்கும் இடம் இல்லை. பொய்மைக்கும் பித்தலாட்டத்திற்கும் நிறைய இடம் உண்டு. இந்துமத புராணங்களில் ஆராய்ச்சி செய்தவர்களுக்கும் உண்மையில் மனது தூய்மையாகவும் நேர்மையாகவும் இருந்து ஆராய்ச்சி செய்பவர்களுக்கும் இந்த உண்மைபுலப்படாமல் போகாது. இதோ புராணம் சாட்சி கூறுகிறது. படியுங்கள்.

தேவர்கள் என்று சொல்லப்படுகிறவர்களும் அசுரர்கள் எனப்படுகிறவர்களும் அமிருதம் வேண்டி மந்தரமலையை மத்தாகக்கொண்டு திருப்பாற் கடலைக் கடைந்தபோது ‘வாருணி’ என்னும் தேவதை கடலிலிருந்து வெளி வந்து தன்னைக் கைப்பற்றுவார் வெருமின்றிக் கலங்கினாள். [‘வாருணி’ என்பதற்கு ‘கள்’ என்று பொருள்.] திதி குமாரர்களான அசுரர்கள் அவளை ஏற்கவில்லை. [அதாவது கள்ளை குடிக்கவில்லை.] ஆனால் அதிதிபுத்திரர்களான தேவர்கள் மாத்திரம் அவளை ஏற்றனர். ‘சுரர்’ என்னும் கள்ளை ஏற்கமறுத்ததாலேயே திதி குமாரர்களுக்கு ‘அசுரர்கள்’ என்று பெயர் வந்தது. கள்ளை ஏற்ற தேவர்கள் ‘சுரர்கள்’ ஆனார்கள். புராணங்களெல்லாம் தேவர்களைப் போற்றுகின்றன. அசுரர்களைத் தூற்றுகின்றன.

இதிலிருந்து என்ன தெரிகிறது? ஹரி என்றும் விஷ்ணு என்றும் அழைக்கப்படும் ஒரு தலைவனை—பலம் வாய்ந்த அரசனை—கடவுளாகப் போற்றப் பட்டவனை வணங்குபவர்கள் எத்தகைய அயோக்கியர்களாக இருந்த போதிலும் கள்குடிக்கும் காமுகர்களாக இருந்தபோதிலும் தேவர்கள்—உயர்ந்தவர்கள். இப்படித்தான் புராணங்கள் தீர்ப்புக்கூறுகின்றன.

“அதே கடலைக் கடையும்போது

ஐயோவென்றலறினாலும் — என் கண்ணே!
வையகத்தில் கேட்பதற்கொரு ஆளுமில்லையே!
ஆ...ஹ...ஹ...ஹா !!

காலத்தின் போக்கையும், நடக்கும் அக்கிரமங்களையும், பொது மக்களின் பொருள் விரையத்தையும், அப்பொருளைக் கொண்டே நடக்கும் அட்டூழியங்களையும் நாட்டின் உடனடித் தேவையையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் சந்தேகமற அறிந்திருந்தும் நாள்தோறும் ‘அறநிலை பாதுகாப்பு மசோதா’வை எதிர்த்து “ஹிந்து” வும் “சுதேசமித்திர”னும் ஒருவரை யொருவர் தாவிக் கொண்டு ஒப்பாரி விட்டழுவதின் மர்மம் யாருக்குத்தெரியாது?

‘தேவடியாள் சிறுக்கிகள்’ பலர் வந்தனர் ஆரியபாஷையில் தேவடியாள் என்று அழைக்கமாட்டார்கள். காசுக்காக அப்சரசுகள் என்று அழைப்பார்கள். அதாவது ஒழுக்கத்தைக் கெடுத்து ஊரில் நல்லவர்களே இல்லாதவாறு செய்திடும் காமலோலர்களுக்கு ஆரிய புராணங்கள் இடும் பெயர் அதுதான். அவர்களை ஒருவராவது மணம் செய்து கொள்ளவில்லை. எல்லோரும் பொதுவாக அனுபவித்து வந்தனர். இத்தகைய தேவடியாள்கள் நிறைந்த புண்ணிய பூமியாகிய சுவர்க்கத்திற்குப்போக வேண்டுமென்று கூறுகிறார்கள் ஆரியபுராணிகர்கள். இவர்களை என்ன செய்வது?

அசுரர்கள் என்றும் அரக்கர்கள் என்றும் வேண்டுமென்றே தூற்றி அழைக்கப்படுபவர் குலத்தில் பலி என்பவர் பிறந்தார். சிறந்த நீதிமான். அறம் வழுவாது நடப்பவர். இல்லை என்ற சொல்லையே இல்லையாகச்செய்பவர். யார் என்ன கேட்டபோதிலும் தயங்காமல் கொடுக்கக்கூடிய கொடையாளி. இவ்வளவு நற்குணங்கள் நிறைந்த இவருக்கு ஆரியபுராணம் தரும் சர்டிபிகேட் “அரக்கன்”

இவர் செய்த குற்றம் என்ன? இந்திரன் என்று அழைக்கப்படும் தேவமன்னனுக்குப் போட்டியாக இருந்ததேயாகும். நல்லகாரியங்களைச் செய்து இந்திரன் புகழ் பரவாதபடி செய்தவர். ஆனால் நாஸ்திகர் அல்ல. ஹரி என்றும் விஷ்ணு என்றும் அழைக்கப்படும் தேவர்களாகிய கடவுளையே வணங்கக் கூடியவர். தேவர்களைப்போலவே யாகம் செய்யக்கூடியவர். இவருக்கு இந்தப் புராணம் அளிக்கும் தீர்ப்பு என்ன?

மகாவிஷ்ணுவே வாமனர் எனப்படும் பிராமண பிரும்மாசாரி உருவம் எடுத்துக் கொண்டு பலி அரசரின் யாகசாலைக்கு வந்தாராம். இந்திரனை நற்குணங்களால் வென்ற பலிக்கு எதிராக தனது [பக்தன்—அன்பன் என்பதையும் மறந்து] இந்திரனுக்கு பாரபட்சம் காட்டி பலியைக் கொலைசெய்கிறார். அந்த மகாவிஷ்ணு. இரக்கமற்ற—

அண்டினவர்களையும் அன்பர்களையும் அக்கிரமமாகக் கொல்லுகின்ற இந்த அயோக்கியரைக் கடவுள் என்று ஏற்றுக் கொள்ளும்படி கூறுகிறது அந்தப் புராணம். எதிர்த்தால் நாஸ்திகன், தேவநிந்தனை செய்பவன், அசுரன், அரக்கன் என்று தூற்றுகிறது.

யாகம் செய்யவேண்டும்; தர்மம் செய்யவேண்டும்; எதிரியே வந்தபோதும் இல்லை எனாது கொடுக்கவேண்டும். இவ்வாறு போதிக்கிறது அந்த ஹிந்து ஆரியமதம். ஆனால் அதன் பெயரால் கடவுள் என்று அழைக்கப்படும் மகாவிஷ்ணுவோ அந்த மதக்கோட்பாட்டிற்கு மாறாக நடந்து கொள்கிறார். பலிச்சக்கரவர்த்தியைப் போன்ற ஆஸ்திகராக இருந்திருக்க முடியாது. யாகம் செய்பவர், தர்மம் செய்பவர் விஷ்ணு பக்தர். ஆனால் அவருடைய பக்திக்கு ஆண்டவன் அளிக்கும் அன்பளிப்பு—கொலை. ஏன் அவர் கொலைசெய்யப்பட்டார் என்றால் இந்திரன் புகழ் பரவாமல் செய்துவிட்டார். அசுரகுலம். ஆகையால் கொல்லப்பட்டார். என்று தீர்ப்புக் கூறுகிறது ஆரியபுராணம்.

காந்தி அடிகள் ராம பக்தர். அன்பும் உண்மையுமே வாழ்க்கைக்குத் தேவை என்று அறிவுறுத்தியவர். ஆனால் அவரைச் சுட்டுக் கொன்றவன் ஒரு இந்து வெறியன். ஆரியர் மனதில் கோட்சே ஒரு வீரனாக (hero) போற்றப்படுகிறான். கடவுளின் தூதனாக—மகாவிஷ்ணுவின் மறு அவதாரமாக வணங்கப்படுகிறான். ஏற்கனவே நாரதருடைய கனவில் கடவுள் தோன்றி, தம் பக்தர் காந்தியை அழைத்து வந்து சேர்க்குமாறு கட்டளையிட்டதாக பத்திரிகைகளில் புராணம் வந்துவிட்டது. இனி இம்மாதிரி ஒரு காந்தி புராணம் வந்தாலும் வரலாம்.

காந்தி ராமபக்தர்தான். இருந்தாலும் தேவகுலம் என்று அழைக்கப்படும் பிராமண குலத்தில் பிறக்கத் தவறிவிட்டார். பிறந்தது வைசியகுலம். வைசியனும் சூத்திரனும் ஒன்றுதான். ராம பக்தராகிய அவரை ஆட்கொள்ள எம்பிரானே கோட்சே ரூபத்தில் (அவதாரமாக, வந்து அவரை முதலில் நமஸ்கரித்தார். பிறகு குண்டால் சுட்டார். காந்தியும் வந்தவர் மகாவிஷ்ணுவான ஸ்ரீமத் (நாது) ராமரே என்று தெரிந்துகொண்டுகைகூப்பினாராம். ராம் என்று கூவிக்கொண்டே மண்ணில் சாய்ந்தார். இதுதான் காந்திபுராணம்,

இப்படி வெளிவருமானால் அதுவும் இந்த 1949-ல் பிரசுரமாகுமானாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அநீதிக் களஞ்சியமான புராணக் குப்பைகளைக்

5-ம் பக்கம் பார்க்க

தனித் திராவிடர் ஆட்சி நிறுவவேண்டும்

எஸ். என். விவேகன்

சேர, சோழ, பாண்டியர்களை தோற்றுவித்த இனம்; இமய மலையில் முக்கொடியினை பொறித்த ஒரு இனம், பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே கடல் கடந்து வெற்றி கண்ட ஒரு இனம், உலகுடன் வாணிபம் நடத்திய ஒரு இனம், இன்று பொதுவாக கிராமத்தில், ஒரு தெருவழியே நடக்கக் கூடாது என்றால், கோவிலுக்குள் நுழையக்கூடாது என்றால், குறிப்பிட்ட கிணற்றில் தாகத்திற்கு தண்ணீர் குடிக்கக் கூடாது என்றால், இந்நாட்டில் ஆட்சி செய்வது ஆரிய தர்மத்தின் ஒரு கூறு என்று சொல்லாமல் ஆங்கிலேயர் ஆட்சியில் ஏற்படுத்திய சட்டம் என்று எப்படிக் கூற முடியும்? இந்நாட்டில்ஆளப்பிறந்தவன், இந்த நாட்டில் குடியேறிய ஒருவனால் நாயினும் கீழாக நடத்தப்படுவதை திராவிடக் கழகத்தாராகிய நாம் எடுத்துக் கூறினால். பார்ப்பன விரோதிகள், வகுப்புவாதிகள், தெய்வ நிந்தனையாளர்கள். என்று பழமைக்குப் பரிந்து பேசும் சில பக்க வாத்தியங்களும். பார்ப்பனீயர்களும், தேசியத் தோழர்களும் கதறுகின்றனர். ஒற்றுமை வேண்டுமென்று கூக்குரலிடுபவர்களிடத்தில் வேற்றுமை உணர்ச்சி இருப்பானேன்? இருக்கலாமா?

வகுப்புவாதிகள் யார் ?

B. A., M. A., முதலிய பட்டக் கல்வி படித்த பார்ப்பனர்கள் தங்களை தனியாகப் பிரித்துக் காண்பிக்க வேண்டுமென்று எண்ணுகின்றனரே இது என்? அவர்களுக்கெல்லாம் பூணூல் எதற்காக? பார்ப்பன வகுப்பை ஆரிய இனத்தை தனியாகப் பிரித்துக் காண்பிக்கத்தானே பூணூல் பயன் படுகிறது! நாட்டின் நிலையுணர்ந்த பத்திரிகை ஆசிரியர்களின் தோளில் பூணூல் துவளுவானேன்? பார்ப்பனர்களால் வைத்து நடத்தப்படும் சிற்றுண்டிச்சாலைகளுக்கும் உணவு விடுதிகளுக்கும், பிராமணாள் காபி ஓட்டல் என்று எழுதுவானேன்? பிராமணாள் என்ற அடைமொழி போடுவானேன்? இவ்வாறெல்லாம் இருப்பதும் நடைமுறையில் விடாமல் கைக்கொண்டு வருவதும் வகுப்புவாதமல்லவா? வகுப்புவாதத்தை நடைமுறையில் விடாமல் நடத்திக்கொண்டு வருபவன் வகுப்புவாதியா? அவைகளெல்லாம் மாற்றப்பட வேண்டும், அழிக்கப்பட வேண்டும், என்று கூறுபவர்கள வகுப்புவாதியா? வட துருவத்திலிருந்து தென் துருவம் வரை நோக்கும் பரந்த நோக்கமுடையவர்களுக்கு இது ஏன் புலப்படவில்லை? தங்களைத் தனியே பிரித்துக்கொண்டு அதனை காப்பாற்றுவதற்கேற்ற முறையில் சட்டங்களை வகுத்துக்கொண்டு, இன்னாட்டு, கலை, மதம், கோவில், வர்ணாசிரமம், கலாச்சாரம் இவைகளில் வெள்ளையர்கள் தலையிடக் கூடாது என்று விக்டோரியா மகாராணியிடம் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். அதன்படியே ஆங்கிலேய—ஆரிய ஒப்பந்த ஆட்சி நடைபெற்றது. 1947. ஆகஸ்ட் 14தேதி நடுஜாமத்தோடு ஒப்பந்த ஆட்சி ஒழிந்து அசல் (ஒரிஜினல்) ஆரியர் ஆட்சி இன்று நடைபெறுகிறது.

ஆங்கிலசட்டமா? ஆரியசட்டமா?

இன்று நம்மை ஆளுவது ஹிந்து-லா. பிரிட்டிஷ்-லா. அல்ல. ஹிந்து-லா; மனுஸ் மிருதியை தழுவியது. மனுஸ்மிருதி ஜாதிக்கொரு நீதி கூறும் ஆரிய ஏடு. இதை யாரேனும் மறுக்க முடியுமா? இந்த நாட்டை ஆரியம் அடக்கி ஆட்சி செய்கிறது என்பதற்குஎத்தனையோ உதாரணங்கள் காட்டமுடியும். பாலக் காட்டிற்கருகாமையிலுள்ள சிற்றூர் ஒன்றில் நடந்த நிகழ்ச்சி ஒன்றை இங்கே குறிப்பிடுகிறேன்.

அந்த ஊர் குளத்தில் இரண்டு ஈழவர்கள் குளித்துவிட்டார்கள்; (ஈழவர்கள் குளத்தில் குளித்தது குற்றம் என்று அங்கிருந்த பார்ப்பனர்கள் வழக்குத் தொடுத்தனர். கீழ்க் கோர்ட்டில் குளம் எல்லோருக்கும் பொதுவானது. யாவரும் குளிக்கலாம் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. உடனே பார்ப்பனர்கள் மேல் கோர்ட்டில் வழக்குத் தொடுத்தனர் அங்கிருந்த நீதிபதி ஒரு ஐயர். கோவிலில் நுழைய உரிமையற்ற ஈழவர்கள் குளத்தில் குளித்தது குற்றம் ஆகவே அவர்கள் அபராதம் செலுத்துவதோடு பார்ப்பனர்களுக்கேற்பட்ட செலவையும் குளம் தீட்டுப்பட்டு விட்டபடியால் அதை சுத்தி செய்ய யாகம்செய்யவேண்டும்அதற்காகும் செல்வையும் இவ்விரு ஈழவர்களும் கொடுக்க வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இப்பொழுது கூறுங்கள் இந்நாட்டில் நிலவுவது ஆங்கிலச் சட்டமா? ஆரியச் சட்டமா? என்று. ஆங்கிலச் சட்டத்தின்படியா ஈழவர்கள் குளத்தில் குளிக்கக்கூடாது என்றும் யாகம் செய்ய பணம் வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது. குளம் வெட்ட நெற்றி வியர்வை நிலத்தில் சொட்டப் பாடுபட்டவர்கள் நம் தோழர்கள். எந்தப் பார்ப்பனனாவது ஒரு சொட்டு வியர்வை குளம் வெட்டுவதற்காக சிந்தியிருப்பானா? கரையான் புற்றெடுக்க கருநாகம் குடியிருப்பதுபோல், நம் அருந் திராவிடத் தோழர்கள் உழைக்கவும், ஆரியர் அதன் பயனை அனுபவிக்கவும் இன்நாட்டுச்சட்டம்அனுமதிக்கிறது. இத்தகைய கொடியசட்டம் அளித்த தீர்ப்பிற்கு இன்னுமோர் உதாரணம் தருகிறேன். ஆந்திர நாட்டிலொரு பிராமணன் ஒரு பிராமணப் பெண்ணையும் ஒரு நாயுடுப் பெண்ணையும் மணந்தான் அந்தப் பிராமணன் இறந்த பிறகு அவனுடைய சொத்து யாரைச் சேர்வது என்ற தகராறு ஏற்பட்டது. படிப்படியாக உயர்நீதி மன்றத்திற்கு வந்தது வழக்கு. நீதிபதி லேயனா உற்பத்தி செய்தான்?

சந்திரசேகரஐயரென்பவரால்.நாயுடு பெண்ணுக்கு சொத்தில் உரிமை கிடையாது என்றும் பார்ப்பனப் பெண்ணுக்குத்தான் சொத்துரிமை உண்டு என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது. இது ஆரியர் போற்றும் மனுஸ்மிருதியிலுள்ள நீதி. அதன்படியேதான் நீதியும் வழங்கப்பட்டது. (எந்தப் பார்ப்பனனாவது பார்ப்பனரல்லாத பெண்ணை மணந்து கொண்டால் அந்தப் பெண்ணுக்கு அவன் சொத்தில் உரிமையில்லை. எந்தப் பார்ப்பனரல்லாதவனாவது பார்ப்பனப் பெண்ணை மணந்துகொண்டால் அவன் சொத்தில் அந்தப் பெண்ணுக்கு உரிமையுண்டு.) இது மனுஸ்மிருதியின் நீதி இந்த நீதிப்படிதான் மேற்கண்ட வழக்கிற்கு தீர்ப்புக் கூறப்பட்டிருக்கிறது. இது ஆங்கிலச் சட்டமா? ஆரியச் சட்டமா? இந்த நீதியை ஆங்கி

ஆங்கிலேயன் வருவதற்குமுன் இக்கொடுமைகள் இல்லையா? ஈராயிரம் ஆண்டுகளாய் ஆரியர்களால் இன்நாட்டில் செய்யப்பட்டு வரும் கொடுமையல்லவா இது!

நாட்டைக் காட்டிக் கொடுத்தது ஆரியம்

தேசியத் தோழர்கள் சொன்னார்கள் வெள்ளையர்கள் இந்நாட்டிலிருந்து வெளியேற வேண்டும் என்று. நாம் மட்டும் வெள்ளையன் இங்கேயே இருக்கவேண்டும் என்று சொன்னோமா? ஒருக்காலுமில்லை. வெள்ளையனோடு வேதியர் கூட்டமும் வெளியேறட்டும் என்றுதான் நாம் சொன்னோம். வெள்ளையர்கள் வெளியேறி விட்டனர் இனி வேதியர்களும் வெளியேறட்டும் என்றுதான் இன்றும் கூறுகிறோம். அரசியலைப்பொறுத்த வரையில் நம் நாடு அடிமைப் படுவானேன்? இங்கிலாந்தில் கி. மு. 51-ல் ஜூலியஸ் படையெடுத்த பிறகு வேறு யாரும் படையெடுக்கவில்லை என்று பெருமையாகப் பேசிக் கொள்கிறார்கள். ஆனால் இங்கோ (நம் தளபதி அண்ணா கூறுவதுபோல்) நம் சரித்திரத்தில் "வந்தான். வந்தான்" என்றிருக்கிறதே தவிர" சென்றான் வென்றான்" ¡என்றில்லை! பாரதத் தாய் வாழும் நாடு! ஆண்டவன் அடிக்கடி வந்து அருள்பாலிக்கும் நாடு!! கணக்கற்ற கடவுள்களுக்கு காணிக்கை செலுத்தி வரப்பிரசாதம் பெற்ற நாடு!!! இப்பேர்ப்பட்ட தெய்வாம்சம் பொருந்திய நாட்டின்மேல். அலக்ஸாண்டர், கஜினி, தைமூர், கோரி முகமது முதலிய பேர்கள் படையெடுத்தபோது அவர்களைத் தடுப்பதற்கின்றி எங்கே போயிருந்தன. நம் நாட்டு தெய்வங்கள் எல்லாம் கூண்டோடு குடும்பசகிதமாய்? டச்சுக்காரன் வந்திறங்குவானேன்? பிரெஞ்சுக்காரர் முற்றுகை யிடுவானேன்?? நாட்டைப் பொருத்த வரையில் மராட்டிய ஆதிக்கம் ஏற்படுவதற்குமுன் திராவிடம் தன்னாட்சி கொண்டு தனி நாடாகத்தான் விளங்கியது. ஏற்பட்ட பூசல்களும் மாறுதல்களும் வடக்கேதான் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் நாட்டில் நிலைநாட்டப் படுவதற்கு மூலகாரணமாயிருந்தது பிளாசி சண்டையும் ராபர்ட்க்ளைவுந்தான். இங்கிலாந்தில் போக்கிரி என்றழைக்கப்பட்ட ராபர்ட்க்ளைவ்! உதவாக்கரை என்று தள்ளப்பட்ட ராபர்ட்க்ளைவ்!! சோப்பும், சீப்பும், கண்ணாடியும் விற்க வந்த ராபர்ட்கிளைவ் குமாஸ்தாவாக இன்நாட்டிற்கு வந்த ராபர்ட்க்ளைவ்!!!! பிளாசி சண்டையில் வென்றான் என்றால்! வீரம் செறிந்த மக்கள் உள்ள நாட்டிலே!! அது எப்படி முடிந்தது? அதற்காகத்தான் நந்தமிழ் திராவிட மாணவர்களை சரித்திரத்தைப் புரட்டுங்கள் உண்மையை உணருங்கள் என்று கூறுகிறோம். டில்லியில் சிராஜ் உத்தௌலா ஆண்டுவந்தான். அவனது அமைச்சர் மீர்ஜாபர். டில்லி சுல்தானான சிராஜ் தத்தௌலாவின் படைக்கும் கிளைவின் படைக்கும் போர் மூண்டது பிளாசி என்ற இடத்தில். கிளைவும்

நாட்டுக்கொரு புரட்சிக் கவிஞர்!

தில்லைக்கலைமணி

நாட்டுக்கொரு புரட்சிக் கவிஞராடா—அவன்
நமதுகவி கனகசுப்பு இரத்தினமடா (நாட்)

பார்க்கும்போதே சிங்கத் தோற்றமடா—ஆனால்
பழகப் பழக அவன் நட்புமிக இனிக்குமடா (நாட்)

அறியாமை இருளகற்றும் அறிஞரடா—நமது
அருமைக்கவி பாரதி தாசனுமடா
கொடுமைகளை ஒழிக்கும் கொற்றவனடட—நல்ல
'குடும்ப விளக்கு' செய்த புலவன் தானடா (நாட்)

பெரியாரின் பெரும்படை வீரனடா—நமது
பெரும் தமிழர்களின் மறத் தலைவனுமடா
திராவிடத்தின் ஒப்பற்ற தீரனடா—நல்ல
தேனொழுகும் கவிதைபுனை சிறந்த கவிஞராமடா
(நாட்)

மீர்ஜாபரும் டில்லி சுல்தானுக்குச் சதிசெய்தனர். இச்சதிக்குத் தூது சென்று நாட்டை வெள்ளையனுக்குக் காட்டிக் கொடுத்த கடையன் ஓமிச்சந்த் என்ற ஒரு பார்ப்பனன். இரண்டு லக்ஷம் பவுன் தாருபேசி உளவுகளைச் உளறினான் ஓமிச்சந்த். அதனால் கிளைவ், தன் சிறிய சேனையைக்கொண்டு சுல்தானின் பெரிய படையைத் தோற்கடித்தான். க்ளைவ் ஓமிச்சந்துக்கு இரண்டு லக்ஷம் பவுன் தருவதாக சிகப்புக் காகிதத்தில் எழுதி வேறொரு அதிகாரியின்கையெழுத்தையும் தானே போட்டுக் கொடுத்தான். சிகப்புக் காகிதத்தில் எழுதிய அந்தப் பத்திரம் ஆங்கில சட்டப்படி செல்லாது. இறுதியில் க்ளைவ் ஓமிச்சந்திற்கு பெரியதொரு பட்டை நாமத்தை நெற்றியில் சாற்றினான். இதுபோல் ஆரியம் பன்முறை நாட்டைக் காட்டிக் கொடுத்திருக்கிறது. வரலாற்றின் முக்கியகட்டங்களிலெல்லாம் காட்டிக் கொடித்தே வநதிருக்கிறது: மகதத்தில் நவ நந்தர்கள் ஆண்டு வந்தார்கள். அச்சமயம் அலக்ஸாண்டர் படையெடுத்து வந்தான். அப்போது அவனை மகதத்தின்மீது படையெடுக்கச் சொல்லி மகதத்தைக் காட்டிக் கொடுக்கவும் முற்பட்டான் சாணக்கியன் என்னும் பார்ப்பனன். அலக்ஸாண்டர் வரும் வழியில் சீலம். சீனப். நதிகளுக்கிடையில் போரஸ் மன்னனுடன் கடும்போர் நடத்தி வெற்றி கண்டான். கிரேக்கப் போர்வீரர்கள் தங்கள் தாய் நாட்டிற்குப் போகவேண்டுமென்று கூறியதனால் அலக்ஸாண்டர் மகதத்தின்மேல் படையெடுக்காமல் தன் தாய்நாடு திரும்பினான். பின்பு அதே சாணக்கியன் கடைசி நந்த அரசனைக் கொன்று சந்திரகுப்த மௌரியனுக்குப் பட்டங்கட்டி அவனிடம் சாணக்கியன் அமைச்சனானான். ஆரியர்கள் கொண்டாடும் அர்த்த சாஸ்திரம் என்ற நூலை இயற்றியவனும் அவன்தான். ஹர்ஷர் பௌத்த மதத்தை சேர்ந்தவர். அம்மதத்தின் கொள்கைகள். இல்லாததை எண்ணி எண்ணி வீண் போகாதே! தெரியாத உலகைப் பற்றிக் கவலைப்படாதே!! ஆசையை வெறுத்து அன்பைக் கொள்ளவேண்டும் என்பதே அம்மதத்தின்முக்கிய கொள்கையாகும். பௌத்த மதத்தை சேர்ந்தவர்கள் ஆரியர்கள் செய்வதைத் தடுத்தனர். பௌத்த மதத்தைச் சேர்ந்த ஹர்ஷர் பார்ப்பனன் பார்ப்பனரல்லாதான் என்ற பேதம் கொள்ளாமல் எல்லோருக்கும் பொருள் கொடுத்து ஆதரித்துவந்தார். இதன் காரணமாக பார்ப்பனர்கள் ஒன்றுகூடி ஹர்ஷரைக் கொல்லச் சதி செய்தனர். இது பற்றிய செய்தி ஹர்ஷருக் தெரிய வரவே ஐநூறு பார்ப்பனர்கள் நாடுகடத்தப்பட்டனர். ஆயினும் ஹர்ஷர் கடைசி நாளில் ஆரிய வஞ்சகர்கள் சதியால் கொல்லப்பட்டார். ஆரியத்தினாலேயே அழிக்கப்பட்டது 'நாலந்தா, பல்கலை கழகம். அது பௌத்தர்களின் பல்கலைக் கழகம். இங்கே பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் கல்வி பயின்று வந்தனர். ஆயிரக்கணக்கான விரிவுரையாளர்களும் இருந்தனர். இன்னும் மாணவர்கள் வாழ்ந்த விடுதிகள் இடிந்து காணப்படுகின்றன. அப்பேர்ப்பட்ட பல்கலைக் கழகம் ஆரியத்தினால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. அங்கிருந்த நூல் நிலையம் சாம்பலாக்கப்பட்டது. பல ஏடுகள் எரிக்கப்பட்டன. இதனைச் செய்து ஆரியம் அகமகிழ்ந்தது. இதுபோலவே பல சதிச் செயல்களை செய்து நாட்டைக் காட்டிக் கொடுக்க வந்திருக்கிறது. ஆகவேதான் ஆரியம் இந்நாட்டைவிட்டு வெளியேறட்டும் என்று கூறுகிறோம்.

(தொடரும்)

உதகை வள்ளுவர் நூல் நிலையம்

—:(x):—

“25-2-49 வெள்ளிக்கிழமையன்று மதியம் 3-மணிக்கு உதகை வள்ளுவர் நூல் நிலைய மன்றத் திறப்பு விழா, இவ்வூர் குதிரை பந்தய மைதானத்தில் உயர் திரு. வழக்கறிஞர் ம. கிருட்டினசாமி பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் நடைப்பெற்றது. “நூல் நிலையம்” என்பது பற்றி திருச்சிராப்பள்ளி மத்திய திராவிட கழகத் தலைவர் உயர் திரு தி. பொ. வேதாசலம் பி. ஏ. பி. எல். அவர்கள் மிகச் சிறந்த முறையில் சொற்பொழி வாற்றினார்கள். ஒ. நி.

—:(x):—

ஆம்! இந்நிலையில் பைத்தியக்காரியே தான்

[மா. சு.]

அவள் ஒரு பைத்தியக்காரி!

ஆம்! அப்படித்தான் எல்லோரும் சொன்னார்கள்!

சிக்குப்பிடித்த தலை, தமிழ்நாட்டின் அரசியல் நிலையைப்போல. ஒல்லியான ஒடிந்து விழுவது போன்ற உருவம், இன்றைய காங்கிரசின் தோற்றத்தைப் போன்று!

அந்த ஊரிலே எவ்வளவோ பித்தர்கள் இருந்தார்கள். ஆனாலும் அவளுக்கு மட்டுந்தான் அந்தப் பட்டம். காரணம், அவள் அந்தப் பட்டத்தை மறுப்பதில்லை. ‘ஏ, பைத்தியம்’ என்று யாராவது கூப்பிட்டால் திரும்பிக்கூட பார்ப்பாள். ஆனால்” யாருக்குடா பைத்தியம்? உங்களுக்கா எனக்கா? அட பித்துக்குள்ளிகளே!” என்று அவள் எண்ணுவாள். அப்போது அவள் முகத்திலே ஒரு ஏளனச் சிரிப்பு படரும். அதை ‘பைத்தியத்தின் சிரிப்பு’ என்று இந்த புத்திசாலிகள் முடிவு கட்டுவர்!

‘அவள் ஒரு பைத்தியம்’ என்பதைத் தவிர, அவ்வூர் மக்களுக்கு அவளைப்பற்றி அதிகம் தெரியாது. தெரிந்துகொள்ளவேண்டுமென்ற அக்கறையும் கிடையாது.

எல்லா பைத்தியங்களைப் போலவே அவளும் எப்போதும் பித்துக்குள்ளியா யிருந்ததில்லை. ஆடவரை மயக்கும் அலங்கார அணங்காக இருந்திருக்கிறாள். அப்போது அவளழகைக் கண்டு மயங்கியவர் அநேகர். அவளை அடைய பலர் பலவித முயற்சிகள் செய்தனர். அதிலே வெற்றி பெற்றவர் விநாயகமய்யர்! அவர் அப்போது காங்கிரசு தொண்டராக விருந்தார். அய்யர் அவள் கையைப் பிடிக்கும்போது ஆண்டவன், பாரதமாதா இவர்கள் சாட்சியாக துரோகம் செய்வதில்லை என்றுதான் வாக்களித்தார். அவள் அவரை நம்பி, அவர் விருப்பத்திற்கு ஒப்பினாள். இன்ப வாரிதியிலே அவர்களுடைய வாழ்க்கைப் படகு ஒய்யாரமாகச் சென்றது சிலகாலம். ‘மங்கை’ எனும் நிலையைத் தாண்டி ஒரு குழந்தைக்கு தாயாகும் சமயத்திலேதான் அய்யர் எங்கோ ‘கம்பி நீட்டிவிட்டார்’ அவள் பதைத்தாள். பதறினாள். பலன்?

பெற்றெடுத்த குழந்தையை நம்பிக்கையான ஒருவரிடம் ஒப்படைத்துவிட்டு எங்கெல்லாமோ அலைந்தாள். எப்படியெப்படியோ வாழ்நாளைக் கழித்தாள். வருடங்கள் ஓடின. ஓர் நாள்! கடற்கரையிலே ஒரு மகான், நலிந்துபோன இந்து மதத்தை பலப்படுத்த வேண்டி ‘பகலிலே உண்ணாவிரதம்’ இருந்து கொண்டிருப்பதைப்பற்றி கேள்விப்பட்டாள். ‘பகலிலே உணவு உட்கொள்ளுவதில்லை’ என்ற தீவிர விரதம் கொண்டிருந்த அந்த மகானை தரிசிக்க, அவருடைய புனித கோக்கத்தைப் பாராட்ட மக்கள் சாரி சாரியாகச் சென்று கொண்டிருந்தனர்! இவளும் அவர்களுடன் போய் அந்தச் சாமியாரைக் கண்டாள்.

காவியுடையும், கமண்டலமும், நீண்ட தாடியும் உடைய இந்தச் சாமிதான், தன்னை வஞ்சித்த கயவன்—தன் மாஜி காதலன் என்று கண்ட அவள் அவனை அப்படியே கழுத்தை நெறித்து கொன்றுவிடத் துடித்தாள். கும்பல் அதிகமாக இருந்ததால் கிட்ட நெருங்க முடியவில்லை. ஆகவே ஒரு கல்லைத் தூக்கி ‘சாமி’ மேல் எறிந்தாள். அவ்வளவுதான்! ‘சாமி’யினுடைய பக்தர்கள் அவளை நையப் புடைத்தனர். கருப்புச் சட்டைக்காரன்கள்தான் அவளை அனுப்பியிருப்பார்கள்’ என்று ‘தர்ப்பை புல்’ ஆசிரியர்கள் தாண்டவமாடினார். அங்கிருந்த புத்திசாலியான ஒரு போலீஸ் அதிகாரி ‘அடே... டே... அவள் பைத்தியக்காரியல்ல...” என்று சொல்லி நிலைமையைச் சமாளித்தார். அதிலிருந்து அவள் ‘பைத்தியக்காரி’ யானாள்! பைத்தியக்காரியாகவே வாழ்கிறாள்! அறிவாளிகள் நிறைந்த

6-ம் பக்கம் பார்க்க

அண்ணாமலை நகர் மாணவர் வழக்கு

பெரியார் வேண்டுகோள்

1947-ம் ஆண்டு அக்டோபர் 6-ந் தேதியில் சிதம்பரம் அண்ணாமலை நகர் கல்லூரி மாணவர்கள் ஒரு விழா கொண்டாடிய சமயத்தில் அக் கல்லூரியில் உள்ள காங்கிரஸ் உணர்ச்சி உள்ள மாணவர்கள் சிலர் திராவிடர் கழகக் கொடியைப் பலவந்தமாக இறக்க முயற்சித்ததன் பொருட்டு ஏற்பட்ட குழப்பத்தின் காரணமாக போலீசார் இருதரப்பு மாணவர்கள் மீதும் அதாவது கழக உணர்ச்சி மாணவர்கள் 5-பேர்கள் மீதும், காங்கிரஸ் உணர்ச்சி மாணவர்கள் 12 பேர் மீதும் வழக்குத் தொடுத்தார்கள்.

இவ்வழக்கு சுமார் 2, 3 மாதகாலம் நடந்து சில சாட்சிகள் விசாரிக்கப்பட்டபின் காங்கிரஸ் உணர்ச்சி மாணவர்கள்மீது குற்றம் ஏற்படுவதைக் கண்ட சிதம்பரம் காங்கிரஸ் தோழர்கள் மந்திரியிடம் அணுகியதில் மந்திரியார் அந்த 12 மாணவர்கள் மீதுள்ள வழக்கை வாபஸ் பெற்றுக் கொள்ளும்படி போலீசுக்குக் கட்டளையிட போலீசார் வாபஸ் வாங்கிக் கொண்டார்கள்.

அதுபோலவே கழக உணர்ச்சி உள்ள மாணவர்கள் 5 பேர்கள் கல்வி மந்திரியாரைக் கேட்டதில் மந்திரியார் வாபஸ் வாங்க மறுத்துவிட்டதோடு மாணவர் கழகத் தலைவர் தோழர் மதியழகன் பரீட்சைக்கு உட்காரக் கூடாது என்றும் தடைவிதித்து தடுத்தும் விட்டார். அதன் பிறகு மேற்கண்ட வழக்கை சிதம்பரம், பரங்கிப்பேட்டை ஆகிய ஊர் மாஜிஸ்ரேட் கச்சேரிகளில் ஒரு ஆண்டாக நடக்கும்படி ஏற்பட்டு சுமார் 30 வாய்தாக்களுக்குமேல் ஒத்திப்போட்டு இழுக்கடித்து, வழக்குக்குஆக ரூ. 2000-க்கு மேல் செலவும் ஏற்பட்டு கடைசியாக திராவிட கழகத் தலைவருக்கு 6 மாதம் கடின காவல் தண்டனையும் மாணவர்களுக்கு மொத்தம் ரூ. 500 வரை அபராதமும் விதிக்கப்பட்டு இருக்கிறது.

இந்த வழக்கு சம்பந்தமான தீர்ப்பு நியாயமான தீர்ப்பு அல்ல என்று மாணவர்களும் வக்கீல்களும் கருதுவதாலும் அத்தீர்ப்பு மாணவர்களின் பின் வாழ்வைப் பாதிப்பதாலும் தீர்ப்பின் மீது அப்பீல் செய்யவேண்டி இருக்கிறது.

மாணவர்கள் வழக்குக்கு ஆக சொந்தக் கைப்பொறுப்பில் இதுவரை 2000 ரூபாய்க்குமேல் செலவு செய்து இருக்கிறார்கள். ஆனதால் தற்காலம் அவர்களது நிலைமை அப்பீல் வகையில் செலவுக்குக் கண்டிப்பாய்ப் பொது மக்கள் ஆதரவு தேடவேண்டியதாக இருந்துவருகிறது- எனவே அப்பீலுக்குப் பொதுஜனங்கள் அருள்கூர்ந்து பொருளுதவி செய்ய வேண்டியது மிகுதியும் தேவையான காரியம் என்று கருதுவதால் பொதுமக்கள் தங்களாலான உதவி செய்ய வேண்டுமாய் வேண்டிக்கொள்ளுகிறேன்.

ஈ. வெ. இராமசாமி

நன்கொடை:

ஈ. வெ. இராமசாமி ரூ. 100—0—0

அதி முக்கிய அறிவிப்பு

பிரதி வாரமும் நஷ்டம் ஏற்பட்டுவருவதால் அடுத்த (12-3-49) வாரத்திலிருந்துபிரதிஒன்று ஒண்ணேகால் (0-1-3) அணா 'இலங்கையில் 12 சதம்' என ஏற்படுத்தியிருப்பதற்காக நேயர்கள் எம்மை மன்னிக்க வேண்டுகிறோம். விற்பனைத் தோழர்கள் ஒவ்வொருவரும் அவரவர்க்குத் தேவையான பிரதிகளுக்கு எழுதவும்.

நிர்வாகி.

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்

உடுமலை பீரங்கி

ஆசிரியர் உடுமலை கே. ரங்கநாதன்

வாரப்பதிப்பு.

சென்னை | சனி | 5-3-49

சரோஜினி அம்மையார்

திருமதி. சரோஜினி அம்மையார் சிலகாலமாக நோய்வாய்ப்பட்டிருந்து இறுதியாக மாரடைப்பால் இயற்கையெய்தினார் என்ற செய்தியைக் கேட்க மிகவும் வருந்துகின்றோமென்றாலும் அது நடந்தேற வேண்டிய சம்பவமேயாகும். எவர் ஒருவர் பிறந்தாரோ அவர் இறந்துதானே தீரவேண்டும். இதைத் தடுக்க எக்கடவுளால் முடியும்? எம்மதத்தால் முடியும்? எவ்வகுப்பாரால் முடியும்? என்பதை இது சமயத்திலேனும் கொஞ்சமேனும் மக்கள் யோசிப்பார்களேயானால், உணர்வார்களேயானால் உலகில் நடந்துவரும் அட்டூழியங்களும், அடாத காரியங்களும், பலவும் மக்களை விட்டு விலகியேதீரும் என்பதை எடுத்துச் சொல்ல பின்வாங்க வேண்டியதேயில்லை.

அம்மையார் அவர்கள் தென்னாட்டு நாயுடுவை மணந்திருந்தாலும் நற்காலமாக வடநாட்டில் பிறந்தவரானார். அதனாலேயே தென்னாட்டவரின் போற்றுதலுக் குரியவரானார். ரேடியோக்கள் இடி முழக்கம் செய்கின்றன. தேசியத்தாள்களோ ஒப்பாரி வைத்து அழுகின்றன. அம்மையாரின் புகைப்படங்கள் பத்திரிகைகளை அலங்கரிக்கின்றன. அநேகமாக அம்மையாருக்கு திருக்கோயில்களும் உத்ஸவங்களும் வருஷ விடுமுறை நாட்களும் ஏற்படலாம்.

அம்மையார் அவர்களைபற்றி குறை கூறுவதாகவோ அல்லது குறைத்துப்பேச முற்படுவதாகவோ எண்ணப்படாது. அவர்களின் அரசியல் தொண்டு இருக்கட்டும் ஒருபுரம். அவர்களின் கல்வித்திறனையும் கவித்திறனையும் மெச்சாதவரும் உண்டோ, உண்டோ இவ்வுலகின் கண். ஆகவே அவரின் விசேஷத்தையும் சிறப்பையும் புகழையும் நாம் மற்றவர்களைக் காட்டிலும் ஒருபடி அதிகமாகவே உணரும்படியான நிலையில் தானிருக்கிறோம் என்பதை இதுசமயத்தில் எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

இன்னும் திறந்து பேசவேண்டுமானால், நாடோடிகளையும், ஒழுக்கஈனர்களையும், "கண்டவனெல்லாம் என்மணாளன்" என்ற உத்தமிகளையும், கலையென்ற பேரால் காலைத் தூக்கி நடனமாடி காசைப் பறித்துவரும் கன்னிமார்களையும், இன்னும் எத்தனை எத்தனையோ அடாதவைகளையும் புகைப்படங்களுடன் தனிப்பட்ட விமர்சனங்களுடன் விளம்பரப்படுத்தி மக்களை மாக்களாகச் செய்துவரும் தேசியப் பத்திரிகைகள் என்பவை உண்மைப் புகழுக்குரிய இவ்வம்மையாரைப் பற்றி யாதொன்றும் எழுதாமல் மௌனம் சாதித்திருப்பின் மிக்கதோர் மகிழ்ச்சி கொள்வோம் என்பதை நாம் மறைப்பதற்கில்லை.

அதுவும் இருக்கட்டும், இவ்வம்மையார் மாத்திரம் தென்னாட்டவராக இருந்திருந்தால் அல்லது கூட்டத்தோடு கோவிந்தா போடமுடியாமல் காங்கிரஸ் கொள்கைக்கு மாறுபட்ட கொள்கையுடையவராயிருந்திருந்தால் அல்லது காங்கிரஸை எதிர்த்து மக்களின் உண்மையான முன்னேற்றத்துக்கு உழைக்க முற்பட்டிருந்தால் அம்மையாரின் புகழ் தேசிய ஆசிரியர்களின் கையில் என்னாயிருக்கக்கூடும் என்பதை மக்களே சிந்தித்துப் பார்க்கக் கோருகிறோம்.

இதுவரையும் இத்தென்னாட்டவர் வடநாட்டவர் புகழுக்கும் பெருமைக்கும் எவ்வெந்தவகையில், விதத்தில் உரியவரானார்கள் என்பதை எவரேனும் விரல் விட்டுச் சொல்ல முடியுமாவென்றே கேட்கின்றோம்.

சர்தார் பட்டேல் அவர்கள் சென்னை வந்த காலத்தில் கனம் இராஜகோபாலாச்சாரி அவர்களை இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாகக் கொடுத்த பெருமை இச்சென்னை மாகாணத்துக்கேயுண்டு எனப் பேசியதைக்காண நாம் வியப்படையாமலிருப்பதற்கில்லை. ஆச்சாரியார் அவர்களின் மூளையும், திறனும், அனுபவமும் சேவையும் நாட்டிற்கோ, மக்களுக்கோ, சமூகத்துக்கோ, சமுதாயத்துக்கோ ஒரு துளியேனும் கிடைக்காதபடி அவரை கவர்னர் ஜெனரல் என்ற ஆசனத்தில் அமர்த்தி அசையாதபடி சம்பளமென்னும் ஆணிகளால் அறைந்து, ஒரு சாதாரண உத்ஸவ பொம்மையாக ஆக்கிய செயலுக்கு உடந்தையாக இருக்கும் கீழ்நிலையையே இத்தென்னிந்தியா அடைந்திருக்கிறதேயொழிய மற்றெந்தவிதவிசேஷம் அடைந்துவிட்டதென்று கூறமுடியும்? "நமக்கு இரண்டு கண்கள் போனாலும் எதிரிக்கு ஒரு கண்ணாவது ஊனமாகட்டும்" என்றபடி என்ன மானக்கேடு ஏற்பட்டாலும் திராவிடருக்கு மாத்திரம் இடம் கொடுத்துவிடப்படாது என்ற ஒரே காரணத்தால் இவ்வுண்மையை பலரும் மறைத்தும் செய்கையை புகழுக்குரிய தென்றே மிகைபடுத்தி எழுதிவருகிறார்களேயொழிய மற்றபடி எந்தெந்த துறையில், எவ்வெந்த விதத்தில் தென்னாட்டவருக்கு வடநாட்டவர்கள் விசேஷம் கொடுத்துவிட்டார்கள் என்பதை இனியாவது மக்கள் சிந்தித்துப்பார்க்க மிகவும் வேண்டுகின்றோம்.

கர்ஜிக்கும் சிங்கமெனவே காங்கிரஸ்காரர்களாலேயே புகழப்பட்டுவந்து மறைந்தும் போன தோழர் சத்தியமூர்த்தியின் புகழ் வடநாட்டில் என்னாற்று? காங்கிரசுக்காக லக்ஷக்கணக்கில் செலவு செய்து இம்மாகாணத்தில் காங்கிரசுக்குப் புத்துயிர் கொடுத்த தோழர் எஸ். ஸ்ரீனிவாஸயங்கார் எந்நிலையில் இறந்தார்? இது வடநாட்டைப் பொருத்த விஷயம்.

இத் தென்னாட்டையே எடுத்துக்கொள்வோம். காங்கிரஸ் கொள்கைகளையே ஆதரித்தாலும், காங்கிரசுக்காக சகலவித கஷ்ட நஷ்டங்களை அனுபவித்திருந்தாலும், காங்கிரசுக்கே சகலத்தையும் அர்ப்பணம் செய்திருந்தாலும் ஒரு தனிப்பட்ட சமூகத்துக்கே தனிப்பட்ட சலுகையும் பெருமையும்உண்டுஎன்பதை எவரேனும்மறுக்க முடியுமா? எந்த நிலைமையில் வாழ்க்கையை ஆரம்பித்திருந்தாலும் இறக்கும் தருணம் சொத்துக்காரர் என்ற பெருமையுடன், உலகை விட்டகன்ற சத்தியமூர்த்தியை விட்டுவிடுவோம். அதே சமூகத்தைச் சேர்ந்து விளம்பரம்பெற்று முன்னுக்கு வந்திருப்பவர் எத்தனையோபேர் என்பதை நாம் சொல்லவேண்டுவதில்லை.

அதே காங்கிரஸ்காரரான சிதம்பரனாரின் உழைப்பும் ஊக்கமும் அவருடைய சொத்துக்கும் சுகத்துக்கும் வாழ்வுக்கும் முற்றுப்புள்ளியாக அமைந்தனவே? இதையும் மறுக்க முடியுமா? அவரின் குடும்பத்தார் வறுமையில் வாடிவதங்குகின்றனரே! இவர்களின் நிலை எந்த தேசிய வாதியின் நல்லறிவுக்கும் எட்டவில்லை போலும். மனம் இரங்கவில்லை போலும். இமயமலையளவு தூண்டுதலின் பேரில் பல லக்ஷ ரூபாய் விரையத்தின் பேரில், ஒரு தனிப்பட்ட கம்பெனியாருக்குப் பாத்தியப்பட்டு அக்கம்பெனியாரின் சுயநலத்துக்கு ஓடவிருக்கும் ஒரு கப்பலை 'சிதம்பரனார்' பெயரிட்டு மிதக்கவிட்டதினால் பெரிய காரியம் சாதித்து விட்டதாகப் பறை சாற்றுவது எவ்வித நியாயத்திற்கேற்கும்? அக்குடும்பத்தாருக்கு ஒரு செல்லாக்காசுஉதவியாவதுஉண்டா? இதே சிதம்பரனார்வடநாட்டில் பிறந்து,வடநாட்டவராயிருந்திருந்தால் எவ்வித விசேஷத்தையும்.புகழையும் அடைந்திருப்பார் என்பதை நாம் விளக்க முற்படுவது கொல்லத்தெருவில் ஊசிவிற்ற கதையையே யொக்கும்.

இனி பெண்கள் தானாகட்டும். வடநாட்டுப் பெண்கள் இங்கு கொண்டாடப்படுகிறார்களேயொழிய தென்னாட்டுப் பெண்கள் எந்நிலையில் இருக்கிறார்கள்? ஒரு குறிப்பிட்ட கூட்டத்திற்குச் சேர்ந்தோ அல்லது அக்கூட்டத்தாரின் இஷ்டத்துக்கும் சௌகரியத்துக்கும்அல்லது மற்ற தலைவர் என் போர் சௌகரியத்துக்கும் தலையை அசைத்து ஊங்கொட்டும் நிலையை மறுத்து, விடுத்து, வெறுத்து, தன் மானமேபெரிது மக்களின் நலனே பெரிது, நாட்டின் நலனே சிறந்தது என அல்லும் பகலும் உழைத்துழைத்து உருக்குலைந்து பெண்களின் முன்னேற்றத்திற்கு உற்றதொரு வழிகாண உண்மையாகவே, உத்தமி யென்ற பெயருடன், ஓராடி வந்த எம்அன்னை கே. அலர்மேலு மங்கைத்தாயாரம்மாள் அவர்களைப்போன்றோருக்கும் இந்நாட்டில் புகழும் பெருமையும் கிடைக்கவில்லை என்றால் இத்தென்னாட்டின் யோக்கியதையை என்னென்று சொல்வது? அத்தகைய தாய்மார்கள் சிறப்படையும் காலம் வெகு தூரத்திலில்லை என்பதை அறிய வேண்டியவர்கள் அறிந்தேயிருக்கிறார்கள். பிறரும் அறிய வேண்டுமென்பதுவே எம் அவா.

ஆகவே, சரோஜினி அம்மையார் இறந்ததைக் குறித்து "இழவு விசாரித்தல், துக்கம் அனுசரித்தல், அனுதாபம் தெரிவித்தல்" இவை போன்ற உலக சம்பிரதாயங்களை யொட்டியும் பிறர் அறியவுமேதேசிய பத்திரிகைகளும் ஆசிரியர்களும் கூக்குரலிடுகின்றார்களே தவிர உள்ளன்பு கொண்டோ உணர்ச்சி

5-ம் பக்கம் பார்க்க

ஈரோட்டு ஒப்பற்ற லிங்கன்

[கி. ராமு, இராயபுரம்]

அமெரிக்காவிலே தோன்றிய ஆப்ரஹாம் லிங்கன் தமது விடா முயற்சியாலும், சுய நலமற்ற தன்மையாலும் சலியா ஒத்துழைப்பாலும் தான் கொண்ட லட்சியத்தைச் சாதிக்க முடிந்தது. அவர் கொண்ட லட்சியம் தாம்பிறந்த நாட்டில் நடக்கும் கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளிவைக்க வேண்டுமென்பது. அதற்காக தனக்கு எவ்வளவு இன்னல்களும். இடையூறுகளும் நேரிடினும் மக்களின் சொல்லடிகளையும், கல்லடிகளையும் பொருட்படுத்தாமல் தான் மேற்கொண்ட லட்சியத்தை அடைய தன் உயிரையும் தியாகம் செய்த ஓர் இலட்சிய வீரன் ஆப்ரஹாம் லிங்கன் என்னும் பெரியார் ஆவர்.

ஆங்கிலேய வியாபாரிகள் ஆப்பிரிக்கா கண்டத்திலிருந்து நீக்ரோவர் என்னும் ஓர் இனமக்களை (மனிதர்களை) விலைபேசி வாங்கி அமெரிக்க ஐக்கிய நாடுகளிலே கொண்டு வந்து விற்றார்கள். இவர்களை வாங்கிய முதலாளிகள் கரும்புத்தோட்டங்களிலும், பருத்திக்காடுகளிலும், வேலை வாங்கி நல்ல வருமானம் அடைந்தனர். இதனால் அமெரிக்க ஐக்கிய நாடுகள் அனைத்திலும் இவ் வடிமைகளை நிரப்பி விட்டனர். இவர்களை கால வரையறையின்றி அதிக நேரம் வேலை வாங்கி இவர்களுக்குப் போதுமான உணவும்; உடையும், படுத்துறங்குவதற்கு நல்ல இடமும் தரப்படுவதில்லை, ஏதாவது ஒரு சிறு பிழை ஏற்பட்டால் மிருகங்களை அடிப்பதிலும் கேடாக அடிப்பது. இவ்வாறாக அடிமைகளின் நிலைமை நாயினும் கீழாய் இருந்து வந்தது இதனை அறவே ஒழிக்கத்தோன்றினான் ஆப்ரஹாம் லிங்கன் என்னும் பெரியார். இதன் பயனாக உள்நாட்டுக் கலகங்களும், பெரும் போர்களும் தோன்றின. லிங்கனின் விடாமுயற்சியாலும், சலியா ஒத்துழைப்பாலும் அடிமைகளின் விடுதலைக்காக தான் உடல், பொருள், ஆவி, மூன்றையும் தியாகம் செய்த ஓர் ஒப்பற்ற புருஷன்.

உண்மையையும், நீதியையும் மக்களிடையே பரப்பியதற்காக சாக்ரடீஸ் நஞ்சூட்டிக் கொல்லப்பட்டார். நாணயத்தையும், நல்லொழுக்கத்தையும் பரப்பியதற்காக ஏசுநாதர் இரத்தம் ஒழுக ஒழுக இருப்பாணிகளால் சிலுவையிலே அறையப்பட்டார். வானத்தின் விஞ்ஞான உண்மைகளைக் கண்டு பிடித்துக் கூறியதற்காக கலீலியோ சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார். அஹிம்சையையும், நீதியையும் நிலை நாட்டுவதற்காக தன் நலங்கருதாது பிறர் நலனுக்காக உழைத்த காந்தியார் ஓர் மத வெறியனால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவர்களின் பொன்னான பெயர்கள் இன்றும் உலகில் நிலவுகின்றன, அவர்களுடைய உயிரான பகுத்தறிவுக் கொள்கைகள், நல்லொழுக்கங்கள், பூரண ஒலியுடன் மக்கள் வாழ்விலே கலந்து நலமளிக்கின்றன.

இன்னும் முகம்மது நபி, கார்ல் மார்க்ஸ், ரூசோ ஆகிய பெரியோர்களெல்லாம் தாம் நியாயத்தையும், உண்மை ஒழுக்கத்தை நிலை நாட்டுவதற்காக அக்கிரமத்தையும், அநீதியையும் எதிர்த்துப் பல இன்னல்களுக்கும் உள்ளாகி தங்கள் தங்களின் இலட்சியங்கள் மலர்வதைப் பார்த்துக் கொண்டே உயிர் நீத்தனர். அவர்களது தர்ம இலட்சியங்கள் இஸ்லாம் உலகிலே, ரஷ்யாவிலே பிரெஞ்சுநாட்டிலே பூத்துக் குலுங்குவதைப் பாருங்கள்!

ஈராயிரம் ஆண்டு கட்கு மேலாகியும் இந்தப் பாழாய்போன நாட்டிலே நடக்கும் கொடுமைகளுக்கும் அக்கிரம ஆணவச்செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் காலம் வராமல் இருந்தது- ஏன்? இங்கு ஓர் லிங்கன் தோன்றாத காரணத்தால் இந்த இருபதாம் நூற்றாண்டில் தான் இதற்கு ஒரு முற்றுப் புள்ளிவைக்க நம் திராவிடம் ஒப்பற்ற லிங்கனை தந்துள்ளது.

தொடரும்

4-ம் பக்கம் தொடர்ச்சி

கொண்டோ உருக்கத்துடனோ அல்ல வென்பதை அறியாதாரும் உளரா? "மச்சான் செத்தால் மயிராச்சி மச்சான் கம்பளி நமக்காச்சி" என்ற நிலைதானே இத்தேயில் காங்கிரஸ் காரருள் நடந்தேறிவரும் வைபவம். இதை மறைக்கவும் முடியுமா மக்கள் விழப்புற்றிருக்கும் இது காலத்தில்?

எம்மதிப்பிற்குரிய மாபெரும் மக்களேஇச்சம்பவத்தைஉங்கள் சிந்தனைக்குள்ளாக்கிஇனியேனும் சிறப்படைய வழிகோலுங்கள். ஆகவே சரோஜினி அம்மையார் அவர்கள் பிறந்தார்கள். வாழ்ந்தார்கள். இறந்தார்கள். ஆனால் புகழுடன்,சிறப்புடன் பேருடன் கீர்த்தியுடன் மறைந்தார். அன்னாரின் பிரிவு நாட்டுக்கொரு பெரு, ஈடுசெய்ய முடியாத நஷ்டமாகும். அவர் உலகினை அறியாமலிருக்கலாம். மக்களின் நிலையைத் தெரியாமலிருக்கலாம். ஆனால் அம்மையாரை உலகமே அறியும். மக்கள் அறிவார்கள். என்னென்று? காங்கிரஸ் பக்தர் என்றல்ல, ஒரு மாகாண கவர்னர் என்றல்ல, பெரிய இடத்தில் பிறந்த பெண் என்றல்ல, அநேகமாய் அந்நிய நாட்டிலேயே வாழந்துவந்த அம்மையார் என்றல்ல, ஒரு தென்னாட்டு நாயுடுவின் மனைவியார் என்றல்ல, ஆனால் சிறப்புற, பிறர் மெய்மறந்து களிப்புற இனிய கவிதைகள் பாடும் இன்பக் குயிலென்றே. நிலைக்கட்டும் நாட்டில் அவர் புகழ் என்றென்றைக்கும்.

——: (x) :——

இது உண்மையா ?

குட்டிச் சாத்தானுக்கே விண்ணப்பம்

தஞ்சை ஜில்லாவில் மாயவரத்திற்கு அடுத்த தர்மபுரத்திலிருக்கும் மடத்துக்கு அதிபதி ஸ்ரீல ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞான சம்மந்த பண்டார சன்னதிகள் என்பது உண்மையா ?

2. அவரிடமோ அல்லது அந்த மடத்திலோ ஒரு ஆறுமுகஞ் செட்டியார் என்பவர் சென்ற 15 வருஷங்களாக சமையல்காரராக இருந்து வருவது உண்மையா ?

3. மேற்சொன்ன ஆறுமுகஞ் செட்டியாரின் மனைவியான வைரத்தம்மாள் இப்போதைக்கும் சுமார் 16 வயதுள்ள மைனரே என்பது உண்மையா ?

4. மேற்படி ஆறுமுகஞ் செட்டியாரும் மேற்படி வைரத்தம்மாளும் சதிபதிகளாக கல்யாண காலத்திலிருந்து சுமார் 1½ வருஷ காலம் தர்மபுரத்திலேயே ஒற்றுமையுடன் குடியிருந்து வந்தது உண்மையா?

5. நடேச பிள்ளை மனைவி லக்ஷிமி அம்மாள் 1, சாமிநாதப் பிள்ளை மனைவி காசாம்பு அம்மாள் 2, என். நடேச முதலியார் 3, இரத்தின் உடையார் 4, ஆக இந்நால்வர்களும் சதி செய்து 9-2-49 இராத்திரி சுமார் 11½ மணிக்கு, (மேற்படி ஆறுமுகஞ் செட்டியார் மடத்திலேயே இருக்கையில்) மேற்படி வைரத்தம்மாளை வீட்டினின்றும் கடத்திச் சென்று மேற்படி பண்டார சந்நதியிடம் ஒப்படைத்தது உண்மையா ?

6. மேற்படி வைரத்தம்மாளை மேற்படி சன்னதிகளே கெட்ட நோக்குடனும் பெண்டாளவுமே மறைத்து வைத்து வருகிறார் என்பது உண்மையா ?

7. அதே 9-2-49ல் மேற்சொன்ன ஆறுமுகஞ் செட்டியார் பண்டார சன்னதிகளிடமே முறையிட்டுக் கொண்டது உண்மையா ?

8. 14-2-49ல் ஆறுமுகஞ் செட்டியார் மாயவரம் போலீஸ் அதிகாரிகளிடம் நேரிலும் எழுத்து வாயிலாகவும் புகார் செய்து கொண்டும் ஏதொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது உண்மையா ?

9- மேற்படி வைரத்தம்மாள், அப்புறப் படுங் காலத்தில் ரூ 100 பெறுமானமுள்ள ஒரு ஜோடி தோடு, சுமார் ரூ 10 பெறுமானமுள்ள மூக்குத்திரு கணி, சுமார் ரூ 100 பெறுமானமுள்ள உத்திராக்ஷ சங்கிலி, சுமார் 100 பெறுமானமுள்ள 4 புடவைகள் இவைககளையும் எடுத்துக் கொண்டு போகப்பட்டது உண்மையா ?

10. மேற்படி ஆறுமுகஞ் செட்டியார் 21-2-49ல் வேலையிலிருந்து பண்டார சன்னதிகளால் நீக்கப்பட்டு இப்போது தேப்பெருமாநல்லூரில் தங்கி வருவது உண்மையா ?

11. 23-2-49ல் மேற்படி ஆறுமுகஞ் செட்டியார் தஞ்சாவூர்ஜில்லாபோலீஸ்சூப்பரின்டென்டென்டுக்கு பிராது செய்து கொண்டிருப்பதுமல்லாமல் ஷை பிராதின் நகல்களை மதராஸ் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் அவர்களுக்கும் கனம் முதல் மந்திரியார் அவர்களுக்கும் அனுப்பப்பட்டிருப்பது உண்மையா ?

"குண்டாந்தடி"

அரிசி மூட்டை

அடுத்த வாரம்

உடுமலை பீரங்கி

பிரதி சனிக்கிழமையும் வெளிவரும்

சந்தா விவரம்

தனிப் பிரதி	ரூ.	0—1—6
6 மாதங்களுக்கு	ரூ.	2—8—0
1 வருஷத்திற்கு	ரூ.	4—0—0

6 மாதத்திற்குக் குறைந்த சந்தா இல்லை

ஹிக்கின்பாதம்ஸ் ரைல்வே புக் ஸ்டால்களிலும் கிடைக்கும்.

விற்பனைத் தோழர்கள் இல்லாத ஊர்களில் விற்பனைத் தோழர்கள் தேவை.

விளம்பர விகிதங்களுக்கு எழுதவும்.

காரியாலயம்

33, திருவேங்கட முதலித் தெரு

கடலாளியை கவனிப்பீர்களா?

டி. ஆறுமுகம், [காசிபுரம்.]

அநேக ஆண்டுகளாக அன்னியன் ஆட்சியிலே அடிமையாக வாழ்ந்து அல்லல்பட்டு, அவதியுற்று கிடந்த கடலாளி மக்கள் அன்னியன் ஆட்சி அகன்றதும் ஆனந்தப்பள்ளு பாடினார்கள். ஏன்? சலுகைகளைத் தரமறுத்த சதிகாரக் கூட்டம் தன் தாயகத்திற்கு சென்றுவிட்டது. இனிமேலாவது சுகமாக வாழலாம் என்று எண்ணினர். இனி நம்அரசு. கவலையே கிடையாது. அரசியலார் ஆதரவு கிடைக்கும் மற்ற நாட்டவர்கள் எந்த முறையிலே மீன் உற்பத்தி பெருக்க வழியேற்படும். கல்வித் துறையிலும் மற்ற சமூகங்களைப் போல் நாமும் ஓரளவுக்கு முன்னேற்றமடையலாம்என்று மகிழ்ந்தனர். ஆனால் இன்னும் ஒரு சுகம் வந்தபாடில்லை. ஆண்டொன்றுக்கு அநேக லட்சம் ரூபாய்கள் செலவு செய்யப்படுகிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால் அவ்வளவு பணமும் மேற்கு கரையிலுள்ள மீன் பிடிக்கும் மக்களுக்கு செலவு செய்யப்படுகிறதே ஒழிய இதுவரையில் கிழக்குக் கரையில் ஒன்றும் செய்திருப்பதாகத் தெரியவில்லை.

சென்னை மாகாண மீன்லாக்கா 60 பாடசாலைகள் நடத்துகிறது, 7000 சிறுவர்கள் படிக்கிறார்கள் என்றெல்லாம் மீன்லாக்கா மந்திரி கனம் கூர்மையா அவர்கள் தெரிவித்திருக்கிறார். அதுவும் 1921-22ல் 27 கிராமப் பள்ளிக்கூடங்களும் 1922-23ல் 26 கிராமப் பாடசாலைகளும் மேற்குக் கரையில் நடத்தப்பட்டன. கிழக்குக் கரையில் ஒன்றும்யில்லை. 23 24 ஆண்டுகளுக்குப் பிறகும் அதாவது 1945—46ல் மீன்லாக்காவின் ஆரம்ப கல்விசாலைகள் மேற்கு கரையில் 56 கிழக்கு கரையில் 3. மீன்லாக்கா கல்வி வசதி அளிப்பதில் போதிய கவனம் செலுத்தவில்லை என்பது விளங்கவில்லையா? இதைவிட வேதனை தரும் விவரம் ஏறக்குறைய சில ஆண்டுகளுக்கு பிறகும் 1200 மைல்கள் நீளமுள்ள கிழக்குக் கரை முழுமைக்கும் 3 கல்விச்சாலைகளே நடத்த முடிந்தது என்றால் மீன்லாக்காவின் யோக்கியதை என்னவென்று சொல்லுவது.

இந்திய உபகண்டத்தின் முதுகெலும்புகளாய் விளங்கும் மீன் பிடிக்கும் மக்கள் முன்னேற்றத்திற்கு முதல் தேவையான கல்வி கற்பிக்க கட்டாய கல்வித் திட்டத்துடனும் இலவச பாடசாலைகளும் சென்னை சர்க்கார் கடலாளி மக்கள் வாழும் குப்பம் ஒவ்வொன்றிலும் உடனடியாக அமைக்க முன்வர வேண்டும். இனி கடந்த காலத்தை கவலையற்று கழித்திருந்த போதிலும் இனி வருங்காலத்திலாவது ஆட்சியாளர்கள் தங்கள் கடமையினின்றும் தவரமாட்டார்கள் என எண்ணலாமா?

பறிமுதல்செய்!

(மான்)

தென்றலில் தவழ்கின்ற மாடங்கள்
தெருவெல்லாம் ஆக்கியே வைத்தவர்கள்,
குன்றிடைக் குடைகின்ற சிலைகளிலே
கலைகள் ஓராயிரம் குவித்தவர்கள்,
மன்றிடைத் தமிழினை மலர்த்தியிட்ட
மக்களின் தோழர்கள் இவர்களெலாம்
தூண்டிடைப் புழுவாகத துடிக்கையிலே
தூங்குவதேன் ஆண்டியிடம் பெருஞ்செல்வம்?

நீர்ஆடும் கடலமுந்தி முத்தெடுத்து
நிலஞ்சேர்த்த தோழரெல்லாம் வறுமையோடு
போர்ஆடி மாய்கையிலே பொழுதெலாம்
ஆலையில் உழைத்திட்ட ஏழைமக்கள்
மார்வாடி கடைமுன்னே மண்டியிட்டு
மாளுகின்ற இழிநிலை இன்னுமிங்கே
வேரோடிப் படரும்வகை இருக்கையிலே
வீணிலே ஆண்டிக்கேன் பெருஞ்செல்வம்?
நிலந்திருத்தி வளம்பெருக்கும் உழவு மக்கள்

நலம்பெருக வாழுதற்கு வழியேயில்லை!
குலஞ்சாதி பெருக்குகின்ற கோட்டான்கள்
குடியிருப்புக் கின்னுமிங்கே குறைச்சலில்லை!
உலர்ந்திருக்கும் தமிழ்நாட்டில் உரிமைநீரை
பாய்ச்சுவார் உயிர்கள்தம்மை ஆட்சியாளர்
விலைபேசி விற்கையிலே; பற்றற்ற
ஆண்டிக்கேன் பெருஞ்செல்வம்? பறிமுதல்செய்!

பசுத்தோல்.........புலி!

பொள்ளாச்சி, டி. எஸ். லிங்கப்பா,

உலகாண்ட மன்னர்கள் பண்டைநாளில்
உண்மைக்கும் நீதிக்கும் குறிக்கோளாக
நலஞ்செய்யும் அறிஞர்கள். சிலரைக் கொண்டு
நாடெங்கும் பயிரிட்டார் மதக் கோட்பாட்டை
பலமக்கள் அந்நெறியின் பயனாய் மிக்க
பயபக்தியுடன் ஒழுகலானார்; இன்றோ!
கொலைஞர்களுக் கொப்பானார் மதத்தின் வேந்தர்
கொடுமை பலப் பலபுரிந்தார் நீதி கெட்டார்

உழைத்துழைத்து உடல் நலிந்த உழைப்பாளிக்கு
ஒருநேரம் உணவின்றி வாடுகின்றான்
உழுது பயிர் செய்ய அவன் குருதி சிந்தும்
உழவனுக்கு வயிறார உணவைக்காணோம்
களம் நோக்கிப் போர்செய்யும் படைவீரர்க்குக்
கால்வயிற்றுக் கஞ்சிக்கும் வழியைக் காணோம்
புலைத் தொழிலை செய்கின்ற மடத்துச்சாமி
புரிகின்ற தொழிலென்ன என்தோழர்காள்?

பசுத்தோலைப் போர்த்திருக்கும் புலியைப்போல
பண்டார சன்னதிகள் வாழ்க்கையெல்லாம்
நசிந்திருக்கும் நாட்டதனை மேலும் மேலும்
நலிவடையச் செய்கின்றார் திருக்கூட்டத்தார்
பசித்திடுவோர் முகம்பாரார் தாமேயுண்டு
பருத்திடுவார் உடல்கொழுத்து காமம் மிஞ்சி
புசித்திடுவார் பரத்தையரின் இதழின் தேனை
புல்லோரை மேற்கொண்டோம் சைவம்காக்க.

அரைதனிலே பட்டாடை, மேனியெல்லாம்
அழகாக மண்பூச்சு, தாடி, மீசை,
அருகில்வரப் பரிமளிக்கும் கந்தவாடை,
அழகியர்கள் பின்தொடர பவனிகொள்வார்,
திருவாயால் 'சிவா' வென்பார் உள்ளந்தன்னில்
சிந்திப்பார் கட்டிலறை மதுக்கிண்ணத்தை,
குறையாத காமியிவர் வெளி வேடத்தார்
குடிக்கெடுக்கும் மடத்தலைவர் அழிதல் நன்றாம்,

குப்பனாரே, இதோ பதில்!

எம். எஸ். மூர்த்தி

[உடுமலை பீரங்கியாரை கேள்விகள் கேட்கத் துணிந்த குப்பனாரே இதோ உம் கேள்விகளுக்கு பதில்! பதிலும் கேள்வியாகவே தொடுக்கப்பட்டிருக்கிறது. உமக்குப் புரியும் என்ற நம்பிக்கையில். அறிந்து திருந்துவீராக!]

1. பெரியார் காங்கிரஸ் பணத்தை கையாடினார் என்று கபோதிகள் பல வருஷங்களாக கூச்சலிடுவதும் நிரூபிக்கக் கூப்பிட்டால் ஓடி ஒளிவதும் உண்மையா?

2. சென்ற இந்தி எதிர்ப்பு இயக்கத்தின் போது கருப்புச் சட்டை இயக்கமே கிடையாதென்பதும், ஸ்டாலின் ஜெகதீசனின் உண்ணாவிரதம் தனக்கோ, தன்மான இயக்கத்துக்கோ உடன்பாடல்ல என்று பெரியார் அறிக்கை விட்டது உமக்குத்தெரியுமா?

3. 'எடுத்துக் கொள்கிறார்' என்பதற்கும் பொதுமக்கள்கொடுக்கிறார்கள்' என்பதற்கும் உள்ள வேறுபாடு உமக்குப் புரியுமா?

4. பெரியார் 'தன்பெயரை' ராமசாமி என் வைத்துக் கொண்டார் என்று சொல்வதில் உள்ள அறிவீனம் உமக்குப் புலப்படுகிறதா?

5. இந்து மதமே திராவிடர்களின் நலிவுக்குக் காரணம் என உணர்ந்த பெரியாரும் அவர் தம் பெரும் படையும் இந்து மதம் போய் காந்தி மதம் வருவதையும் "இந்தியா" "காந்தி"யாவாக மாறுவதையும் விரும்புகிறார் களென்பதையும்காந்தியார் பெயரைச்சொல்லி பிழைக்கும் ஒரு கூட்டம் அதை விரும்பவில்லை என்பதையும் நீர் அறிவீரா?

6. பெரியாருக்கு. பெரியார் என்றும் அண்ணாவுக்கு 'அறிஞர் தளபதி' என்றும் யார் பெயரிட்டார்களென அறிய எதாவது ஒரு திராவிடகழகப் பொதுக் கூட்டத்திற்குப் போய் தெரிந்து கொள்ளும் தெளிவு உமக்கு ஏற்படுமா?

7. பெரியார் அறிஞர் இவர்களுக்கு வீரமும் விவேகமும் மட்டுமல்லாமல் உம்மைப் போன்ற மந்த மதியினர்களின் உளரலைப் பொறுத்துக் கொள்ளும் பண்பும் உண்டு என்பது உமக்குத் தெரியுமா?

8. 1921-ல் பக்கிங்ஹாம் மில்லில் நடந்ததைப் பற்றி யாரைக் கேட்பது என்ற அறிவுத் தெளிவு உமக்கு ஏற்படுமா?

9. உத்தியோகங்களை 'வாயில் போட்டுக்' கொள்வது என்பது ஒரு ஜாதியின் பிறவிக் குணம் என்பதும் திராவிடர்களுக்கு அந்த புத்திகிடையாதென்பதும் உமக்குத் தெரியுமா?

10. அரசர்களிடமும் ஜமீன்தாரர்களிடமும் பண உதவி பெறவேண்டிய அவசியத்திலேயே பெரியார் இருந்ததில்லை என்பது பல்லை இளித்து பண உதவிபெறும் கூட்டத்தைக் கண்டாலே அவருக்குப் பிடிக்காது என்பது உமக்குத் தெரியுமா?

11. திராவிடக்கழக நிதியைப்பற்றி கேட்க பகுத்தறிவு வாதிகள் ஆ[illegible]ரமாயிரம்பேர் உண்டென்பதும்கோடரி காம்புகள் அந்த வேலையில் ஈடுபட வேண்டிய தேவை இல்லை என்பதை நீர் உணர்வீரா?

3-பக்கம் தொடர்ச்சி

நம நாட்டிலே அவள் 'பைத்தியம்; என்று கருதப்படுவதில் வியப்பென்ன இருக்கிறது? [இது உண்மையாக நடந்ததல்ல! கற்பனைக் கதையேதான்!]

மந்தபுத்தி மடையனுக்கு பத்திரிகை ஒருகேடா?

எஸ். சரோஜா, ஈரோடு.

இருக்க இடம் தந்தால் படுக்க பாயும் தலையணையும் கேட்டான் போன்று ஓர் அனுதைக் கூட்டம் சொந்த நாட்டில் பிழைக்க வக்கில்லாமல் பிற நாட்டில் வந்து பிச்சை எடுத்து வந்த பிரம்மாவின் புதல்வர்களே. நீ வர வர உன் வரட்டுப் பத்திரிகையிலே ஒன்றுக்குப் பத்தாக எங்கள் கழகத்தை அயோக்கியத்தனமாக வெளியிட்டுக்கொண்டேயிருக்கிருய். கண்ட பொருள்களையெல்லாம் கடவுளாக்கி, மக்களின் மனதிலே மடமை என்னும் விதையைத் தூவிவிட்டு மாட மாளிகை கட்டிக்கொண்டு வாழ்கிருயா? மானங்கெட்டவனே. குரங்கு கையில் பூமாலை அகப்பட்டது போல் உன்னிடம் ஒரு பத்திரிகை அகப்பட்டுக் கொண்டது. எப்படி சந்தனமரம் பாம்போடு கூடியிருக்குமோ? எப்படி தாழை முட்களோடு கூடியிருக்குமோ அப்படியே நீயும் உன் சூதியும் வஞ்சகத்தினுலும், சூழ்ச்சியினுலும் நிறைந்திருக்கிறீர்கள். அறிவில்லா ஆண்மகனே எட்டிமரத்திற்குத் தேன் ஊற்றி வளர்த்தாலும் அதற்கு தித்திப்பு உண்டாகுமா? நாயின் வாலை நேராக நிமிர்த்த முடியுமா? அதுபோல் எங்கள் அறிவியக்கத் தோழர்கள் எவ்வளவு அறிவு புகட்டினுலும் குருடனுக்கு கண்ணுடியை காண்பிப்பது போன்றும், செவிடன் காதில் சங்கு ஊதுவது போன்றும் இருக்கிறது. நீ எவ்வளவுதான் அறிவில்லாமல் தலைவர்களைத் தாக்கி எழுதினுலும் அது சூரியனைப் பார்த்து நாய் குலைப்பது போன்று. வீணுக தாள்களையும் உன் சொற்ப அறிவையும் வீணுக்காதே. பிறகு மறுபடியும் பழைய நிலைமை பிச்சை எடுக்க நேரிடும். பிறகு ஒரு செல்லாக் காசுகூட கிடைக்காதே. இனிமேல் எந்த நேரத்திலும், எந்த நாளிலும் திராவிடர்கள் ஏமாற மாட்டார்கள். நீங்கள் ஏற்படுத்திய ஜாதி—மதம் சாஸ்திரம் என்ற குப்பையில் சீரழிந்த ராமாயணத்தையும்—மக்கிப்போன மகா பாரதத்தையும் அதில் போட்டு பகுத்தறிவு என்னும் நெருப்பு மூட்டி, சாம்பலாக்கி விட்டோம், நாட்டை ஆண்டிராத, ஆளமுடியாத, ஆளும் பரம்பரையினரல்லாத காட்டுமிராண்டிகளாகிய உங்களுக்கு இவ்வளவு வீரம் இருந்தால் நாட்டை ஆண்ட தமிழருக்கு எவ்வளவு வீரம் இருக்கும். புல் எடுக்கும் கையால் வாள் பிடிப்போம் என்ருல் நாங்கள் பரம்பரையாக வாள் பிடிப்பவர்கள் அணுகுண்டையல்லவா கையில் எடுப்போம். முதலில் நீயார் எங்கள் கழகத்தையும்—எங்கள் தலைவர்களையும் தாக்கி எழுத. உனக்கு எவ்வித உரிமையுமில்லை. திராவிட நாட்டிற்கு கோட்சே கும்பல் செய்த துரோகங்களை மறந்துவிட மாட்டார்கள் என்பது உறுதி. தன்னுடைய சொந்த நிலையை தான் அறிந்துகொள்ளாசொக்கலிங்கத்தின் கங்காணிக் கும்பலே, வைத்தியநாதய்யரின் வரட்டுமூளை கொண்ட வடநாட்டுக் கும்பலே இனி சொகுசு வாழ்க்கைக்கு இந்நாட்டில் இடமில்லை. உனக்கு ஆண்மை இருந்தால் அறிவு இருந்தால் ஆற்றல் இருந்தால்நேருக்கு நேராக வந்து உன் அசட்டுக் கேள்விகளைக் கேள். அப்பொழுது எங்கள் தோழர்கள் இனியும் கனிவுடன் தக்க விளக்கம் தர தயங்கார்கள்.

பால்மணம் மாருத குழந்தைகளிடம் ஹிந்தி என்னும் விரியன் பாம்பு விளையாடுகிறது விஷத்தோடு. திராவிடரின் விழிப்பை எழுச்சியை முன்னேற்றத்தையும் காலத்தையும் நீ அறிந்து கொள்ளவில்லை. இதற்குக் காரணம் எங்களை ஏமாற்றிப் பிழைத்து வந்ததேயாகும். இனிப் பலிக்காது. எங்களிடம் வீணர்கள் இல்லை. வீரர்கள் லட்சக்கணக்கில் உண்டு. அதுவும் ஆண்களை விட பெண்களே அதிகம். படையில் பெண்கள் அதிகமாக இருக்கின்றனர். நடத்திச் செல்ல தாய்மார்களும்—தோழியர்களும் இருக்கின்றனர். ஆனுல் காந்தியையும் மீறிவிட்ட அஹிம்சா தந்தை (பெரியார்) தடுத்துக் கொண்டிருக்கிருர். ஆதலால் இனியேனும் திருந்திக் கொள்வதே முறை.

தாளமுத்து—நடராஜன்மீது ஆணை.
மலர்க திராவிடம்—வீழ்க ஆரியம்
வாழ்க நம் தலைவர்கள்.

நெல்லையில் பெரியார் – அண்ணு

திருநெல்வேலி சந்திப்பு ஆற்றுப் பாலத்தின் வடபக்கம் பெரியார் திட்டில்

ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும்

அக்கூட்டத்தில் அண்ணுமலைநகர் மாணவர் வழக்கின் உதவிக்காக, பெரியாரிடம் பணமுடிப்பு ஒன்று கொடுக்கப்படும்

யாவரும் தாராளமாகப் பணம் உதவி, அதற்குரிய நன்கொடைச் சீட்டையும் பெற்றுக்கொள்ள வேண்டுகிறேம்.

கூட்ட நாளும்—நேரமும் அடுத்த அறிவிப்பில்

நெல்லைநகர
திராவிட கழகம்

A. இராமநாதர்,
செயலாளர்.

ஆரியர் சூழ்ச்சி

"கரம்"

"பண்டித மோதிலால் நேரை பறிகொடுத்தோமே" என்ற மெட்டு

அறியீர்களோ? ஆரியர் சூழ்சி இன்னது என்று
இன்னது என்று நம்முன்னேரைக்கொண்டு.

ஆடுமாடு மேய்ப்பவர் நாடுபல கொண்டபின்னிருந்து
ஆளதலை பட்டதனின் கோல்திறமைப்பார்!
கோல்திறமைப்பார்! அவர்செய்குடிபயனைப்பார்
(அறி)

பின்னேட்டம் நன்கரிந்து முன்னோக்காய் புகுத்துவிட்
என்னுளு மிங்குநிற்க ஏய்ப்புமொழியை [டார்
ஏய்ப்புமொழியை பலபுரட்டு நூலினுல் (அறி)

பக்திமிகும் மாக்களென்று பகுத்தறிந்து பார்ப்பனர்
முக்தி தங்கள் மூலமென்று முடிச்சிபோட்டனர் [கள்
முடிச்சி போட்டனர் நான்கு குலமும் பூட்டினர் (அறி)

கோயில்பல கட்டிவிட்டு கல்லுசாமி தீட்டிநட்டு
கோடிபணங் கிட்டிவாழ குருக்களாகவே
குருக்களாகவே கூத்தி படைப்பராகவே (அறி)

கட்டுபடா ஜாதியாரை தொடபடாமக் களென்று
விட்டுபிரி யென்ற சட்டம் என்னவேதனை?
என்னவேதனை? இது எவர்க்குச் சோதனை? (அறி)

புத்திக்கெட்டு யாவையும் தொட்டுசிரமேற் றதினுல்
நந்தி வந்தகட் டழிந்தநாசமாய் போனேம்!
நாசமாய் போனேம்! நம்நாடுமே யிழிந்தோம்! (அறி)

ஆகாது அந்தணர்சொல் அப்போதே யிருந்ததினுல்
நோகாது நிலைத்திருக்க புகுத்தினர் வேதம்
புகுத்தினர் வேதம்பின் திருத்தினர் போதம் (அறி)

இல்லையாகில் பௌளத்தமேது? வாதஞ்செய் ஜைன
தொல்லைசெய் நரமிருபலி யொழிந்த தெப்படி? [மேது?
ஒழிந்ததெப்படி? சீதை புகுந்த தெப்படி? (அறி)

அறிந்து வெளிபடுத் தாவண்ணம் அடக்கிவந்த
வேதக்கூற்று
புரிந்து கொண்டார் திராவிடர்கள் பலிக்காதிச்சூது
பலிக்காதிச்சூது இனியிளிக்குமே வாது (அறி)

எத்து வழி யில்லாமலே யென்னென்னமோ பிதற்று
பித்து பிடித்ததுநின்று பிரசுரம் மூலம் [ருர்காண்
பிரசுரம் மூலம் இனி புகலிடம் ஓலம் (அறி)

புதிய அகராதி

தஞ்சை
து. பொ. ஆல்பர்ட்

1. பெருந்திருடன்:—
திருமணம் வேண்டாமென்று சொல்லிப் பெண்களை இழிவு படுத்துபவன்:

2. தாலி:—
ஆண்களுக்கு பெண்கள் அடிமை என்பதைக் குறிக்கும் அறிகுறி.

3. மந்திரவாதி:—
ஏமாந்த சோணகிரிகளிடம் பணம் பறிக்கும் எத்துக்காரன்.

4. விதவை:—
சமூகம் ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதி வழங்குகிறது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

5 புகைவண்டி:—
'சாதிச் சண்டையையும் உயர்வு தாழ்வு என்ற வித்தியாசத்தையும் பாராதீர்கள், ஒருவர்மேல் ஒருவராக நெருங்கி உட்கார்ந்து ஒற்றுமைப் படுங்கள், என்று உபதேசிக்கும் ஓர் சீர்திருத்த வாதி.

6. டைரி:—
மனிதன் ஞாபகசக்தியில் வர வர மிகத்தாழ்வடைகிருன், என்பதைக் காட்டும் அறிகுறி.

7. பஞ்சாங்கம்:—
பார்ப்பனர் பாட்டாளி மக்களின் பணத்தை பகல் கொள்ளை அடிப்பதற்கு ஏற்ற சாதனம்.

8. கோவில்:—
தாசிகள் உற்பத்தியாகும் இடம்.

9. பூணுல்:—
ஆரியருக்கும் திராவிடருக்கும் வித்தியாசம் கண்டுபிடிப்பதற்கு ஆரியரால் ஏற்படுத்தப்பட்ட ஓர் அறிகுறி,

10. பூசாரி:—
கோவிலுக்கு வரும் கன்னிப் பெண்களைக் கற்பழிக்கும் காமுகன்.

11. மடம்:—
சோம்பேறிகள் கூடும் இடம்.

12. கதர்:—
சாந்தத்தையும் அமைதியையும் அடக்கத்தையும் பொறுமையையும் இழந்து தேசத்து மக்களிடம் பிளவையுண்டாக்கும் அற்புத சக்தி.

நம் நாட்டு சிற்பங்கள்

[வரதராஜ பேட்டை, பி. கமலநாதன்.]

சிற்ப கலைகளில் நிகரில்லாது புகழுடன் விளங்கும் நாடு நம் திராவிட நாடு என்று சொன்னால் மிகையாகாது. ஒப்பு உயர்வில்லாது உயர்ந்தோங்கி நிற்கும் பல அற்புதமான கோவில்களையும் கோட்டைகளையும் நாம் கண்ணாரக் கண்டு வாயார புகழ்ந்து, மனமாற வாழ்த்துகிறோம் நம் நாட்டு சிற்பிகளை, சிற்ப கலைகளைக்கண்டு நாம்பெருமை படைகிறோம் அவர்களை பாராட்ட கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால், அதே நேரத்தில், அவர்களின் அறியாமையையும், அடிமை புத்தியையும் கண்டு வருந்தாமலும், கண்டிக்காமலிருக்கவும் முடியாத நிலைமையிலிருக்கிறோம். உதாரணமாக. நம் நாட்டு சிற்பிகளை மநுஸ்மிருதி இதிகாச புராணம் என்ற பெயரால் சூடுபோட்டு ஏமாற்றிய ஒரு சிறுநரி கூட்டத்தார், தங்கள் வாழ்வுக்கு வகைதேடும் துர் எண்ணத்தால் கோவில்களின் பேரால், கோவில் கோபுரங்களின் பேரால், கோபுர சிற்பங்களின் பேரால், தங்கள் கருத்துப்படி, கண்ணால் மிரட்டி, மூலையால் மயக்கி புண்ணுங்குழியிடையே தள்ளும் வகைகளை சிற்பங்கள் மூலமாய் செய்து கொண்டார்கள். இம்மூடமந்திர வித்தைகளை நம் சிற்பிகள் உணர்ந்தார்களில்லை. ஆகையினாலே தான் தங்கள் முழுத்திறமைகளையும்கோவில்களிலும், கோபுரங்களிலும், கோட்டைகளிலும் காட்டியிருப்பதை நாம் காண்கிறோம். வருடந்தோறும் நடக்கும், பல தேர், திருவிழா சேவைகளுக்கு நாம்போவது, போய் கண்மூடித்தனமாய் காசுகளை செலவழிப்பது நம்மிடையே பழக்க வழக்கமாயிருந்து வருகிறது. நாம் போய் கண்ட பலன் யாது? காணும் அதிசயங்கள் எவை? கிடைக்கும் தரிசனங்கள் எது? என்று சிந்தித்துப் பார்த்தோமா? பார்க்கிறோமா? என்ன சன்மார்க்க நெறியை உணர்ந்தோம் நாம் போவது எதற்காக என்று சிந்திக்கின்றோமா; இல்லை இல்லவே இல்லை. இதோ! உங்கள் கருத்துக்கும் காதுக்கும், சிந்தனைக்கும் கூட. கோவில் கோபுரங்களில் கண்ட கடவுளர்கள், சாமிகள், தேவர்கள். முனிவர்கள், கருடர், கிம்புருடர், கந்தர்வர் நிர்வாணமாயுள்ள பொம்மைகள் ஆண்பெண் சேர்க்கையைப்போலபொம்மைகள் பிள்ளை தாய் வயிற்றிலிருந்து பாதி வெளியே வந்துள்ள மாதிரியான பெண் பொம்மைகள், காதலர் களியாட்டங்கள் போன்ற பொம்மைகள் இவைகள்தானே இவைகள் இல்லை என யாரும் மறுக்க முடியுமா? கோவில் குருக்கள் கோவிலைச் சுற்றும் கோவில் தாசிகள் அவர்களை ஆட்டுவிக்கும் மாமாக்கள், இன்னும் அர்ச்சகர் கோவிலுக்குவருபவர்களை அவர்கள் ஆட்டிவைக்கும் விந்தைகள் இன்னும் பிற என்னவென்னமோ விபரீதசெய்கைகள். இவைகளெல்லாம் எதற்கு, இத்தனைவிதமான, ஆபாசமான, அர்த்தமற்ற, அநாகரீக பொம்மைகள் ஏன், அவமானகரமான செய்கை கொண்ட பொம்மைகளை கோபுரங்களில் அமைத்திருப்பது எதற்கு என்று யாராவது கேட்டீர்களா? கேட்டால் கண் அவிழ்ந்துபோகுமா? கடவுள் லீலைகளில் இதுவும் ஒன்று என்ற மூட நம்பிக்கையல்லாது வேறென்ன சொல்ல முடியும், இத்தகைய நிர்வாணக் காட்சி, ஆண் பெண் சேர்க்கை, பிள்ளை பெறும் விதம், காதலர் களியாடல் விளையாட்டு எல்லாம் எதற்கு என்று என்னைப்போல கொஞ்சம் மீறிய பேர்வழிகள் கேட்டுவிட்டாலோ; கடவுள் துவேஷி, நாஸ்திகன் என்று சொல்லுவதல்லாது வேறென்ன பதில் கிடைக்கிறது. அப்படியும் பெரிய மனது வைத்து பதில் சொல்லுகிறவர்கள் அவைகள் எல்லாம் கண் திருஷ்டிக்காக என ஒரே வார்த்தையில் பதில் சொல்லிவிடுகிறார்கள். தேவசந்நிதிகளுக்குச் செல்லும் நாம் மிக, பய பக்தியுடன் கடவுள் தரிசனமும், அவர் நம்மை ஆட்கொள்ளவும், அவரால் நமக்கு ஏதாவது அநுகூலம், சன்மார்க்கம், கிடைக்கும் என்றுதானே போகிறோம், ஆனால் நமக்குகிடைத்த தரிசனங்கள், என்ன, துன்மார்க்க வழிக்கு அடிகோலும், பலவித லீலா விநோதங்களை சித்தரிக்கும் கோபுர பொம்மைகளேயல்லாதுவேறென்ன கண்டோம். பெண்டீர், ஆடவர்கள் தங்கள் கருத்தை மதியை இழக்கும் பல மட செய்கைகளையல்லாமல் வேறென்ன கண்டோம்,

முற்றுந் துறந்த முழு ஞானிகளும், பரமசாதுக்களும், வாலிப ஆண்களும் பெண்களும் தங்கள் பக்தியை மறந்து, விரதத்தை மறந்து, சித்திரபாவைகளைக்கண்டு, தாசிகளின் தளுக்கு வேலைகளை கண்டு தங்கள் சித்தமிழந்து, பித்தர்களாயன்றோ செய்கிறது. இல்லை எனில் அறிவுக்கு, அன்புக்கு, அறநெறிக்கு, ஆத்ம சாந்திக்கு வழிகாட்டும், ஏதாவது ஒன்றை காண்கிறோமா? சாமிகளின் பேரால், எத்தனை சண்டித்தனம், கோவில்களின் பேரால், எத்தனை கோலாகல லீலை, கோபுரங்களைப் பார்த்து நாம் கற்றுக்கொண்டது என்ன? மதியிழந்தோம், மடையரானோம், மந்தியானோம், நம்மை மந்தியாக்கி தொந்தி பெருக்க உந்தி வளர்க்கும் ஊதாரி கும்பல்கள், உச்சி குடுமிகள், உன்னத நிலையடைந்து உயரிய ராஜ போகத்தில் வாழ்ந்து வருகிறது. நாம் நெறியிழந்து, நாணமிழந்து, தன்மான உணர்ச்சியிழந்து, நன்னடத்தை இழந்துசிந்தனையிழந்து கடவுளின் தன்மையறியாத கசடர்களானோமேயல்லாது வேறென்ன கண்டோம். மேனாட்டாரெல்லாம் கடந்த மகாயுத்தத்திலிருந்து இன்றைய நவீன யுத்தங்கள்வரை கண்டுபிடித்த சாதனங்கள் கணக்கிலடங்கா. அணுகுண்டு முதல் ஆளே இல்லாமல் பறந்து போய் குறிப்பிட்டயிடத்தில் குண்டுவீசிவிட்டு மறுபடியும் புறப்பட்டயிடத்திற்கே வந்து சேரும் ஆகாய விமானம் வரை இன்னும் வானளாவும் சிலைகளும் அடுக்குமாடி வீடுகளும் எவ்வளவோ. இவைகளுக்கெல்லாம் என்ன திருஷ்டி கழித்தார்கள். நம் நாட்டு கோபுரங்களிலே கோட்டைகளிலே கட்டியுள்ள பதுமைகளுக்கு திருஷ்டி கழிக்கவில்லை என்றால், கோபுரம் இடிந்து கோவில் அர்ச்சகர்கள் தலைமேலா விழுந்துவிடும், அல்லது அந்த கோவிலுள் இருக்கும் சாமி கோபித்து கொள்ளுமா? அல்லது அவைகளை கட்டின சிற்பிகள் செத்து போவார்களா? அல்லது இவைகளுக்கு காரணமாயுள்ள கும்பலும் ஆதாரமாயுள்ள மநுஸ்மிருதி, சாஸ்திர இதிகாச புராணங்கள் குபீரென்று பற்றி எரிந்துவிடுமா? இதெல்லாம் எத்தர்களின் பித்தலாட்டம் என்பதல்லாது வேறென்ன? "கோவில் என்பது குச்சுகாரர் விடுதி என்று காந்தி மகானேசொல்லிவிட்டாரே, இத்தகைய கோவில்களை இடித்து ரோடுகளுக்கு ஜல்லிபோட வேண்டுமென்று சொன்னால் நாஸ்திகனா? இத்தனை அக்கிரமங்களை அசையாது பார்த்து நிற்கும் கல்லு சாமியை உடைத்து கட்டிடங்களுக்கு உபயோகப்படுத்த வேண்டும் என்று சொன்னால் கடவுள் துரோகியா? துன்மார்க்கத்தை வளர்க்கும் துஷ்டர்களை ஒழிக்க வேண்டும் என்று சொன்னால் பார்ப்பன விரோதியா? பகுத்தறிவுடன் பதில் சொல்லுங்கள். கடவுளின் பேரால், சாத்திரங்களின் பேரால், மதத்தின் பேரால், காமவேட்கையை வளர்க்கும் சாதி பேதங்கள் கற்பிக்கும், மடமையை வளர்க்கும் கும்பல்கள் ஆஸ்திகரா நாஸ்திகரா? அறியாமையை வர்ளக்கும் ஆரியம் ஒழியட்டும் என்றுதான் சொல்லுகிறோம். கலை உரைத்த கற்பனையை நிலையெனவே கொண்டாடும் கண்மூடி வழக்கம் ஒழியட்டும் வளர்க்கப் பாடுபடும் கயவர்கள் ஒழியட்டும். ஒன்றே குலமும் ஒருவனே தேவன் என்று உணரட்டும் என்றுதானே சொல்லுகிறோம். தன்மானங்காக்கும் தமிழனுக்கு தனியே ஒரு இனமும் குணமும் உண்டு என்று உலுத்தர்கள் உணரட்டும்.

கோபாலகிருஷ்ண
டைப் பவுண்டரி
எங்களிடத்தில்
இங்கிலீஷ் ◇ தமிழ் ◇ தெலுங்கு
டைப்புக்கள் ◇ பார்டர்கள்
உயர்ந்த மெட்டலில் குறைந்த விலையில்
குறித்த காலத்தில் கொடுக்கப்படும்.
கோபாலகிருஷ்ண டைப் பவுண்டரி
6: பண்டாரம் தெரு
புரசைவாக்கம், : : மதராஸ்-7.

1-ம் பக்கம் தொடர்ச்சி

கொளுத்தவேண்டிய காலத்தில் அவைகளை ஆதரித்து நீதிபதிகள், வக்கீல்கள் போன்ற பெரியவர்கள் பிரசாரம் செய்கிறார்கள் அல்லவா? பெல்ஜியத்திலிருந்து வந்த கண்ணாடியின் முன் அமெரிக்காவிலிருந்து கப்பலில் வந்த சீப்பைக் கொண்டு ஆங்கிலேயனின் கிராப்பைப் போல வெட்டிக்கொண்டுள்ள தலைமயிரை வாரிக்கொண்டு போர்டுமோட்டாரில் பிரயாணம் செய்து மின்சாரவிளக்குகள் விசிறிகள் நிறைந்த வேதசாஸ்திர சபைக்கு வந்து ஒலி பெருக்கியின் முன்னால் நின்றுக்கொண்டு புராணதர்மமானது நமக்கு அஸ்திவாரமாக இருக்கிறது. பிராமணர்கள் ஒன்றுசேர்ந்து நம்ம சாஸ்திரம் புராணாதிகளை புனருத்தாரணம் பண்ண வேண்டும் என்று பேசும் பி. ஏ. பி எல் படித்த நீதிபதி இந்நாட்டில் இருப்பாரானால் மேற்கூறிய காந்திபுராணம் 1948-ஏன் வெளிவராது.

புராணம்அளிக்கும் தீர்ப்பைப் போற்றுபவர்கள்—அதற்கு ஆதரவாக பிரசாரம் செய்பவர்களே நீதிபதியாக நீதிமன்றத்தில் அமருவார்களானால் இந்த நாட்டில் பலிச்சக்கரவர்த்திக்கும்அசுரர்கள் என்று அழைக்கப்படுகிறவர்களுக்கும் நேர்ந்த கதியே ஏற்படும் என்பதில் என்ன சந்தேகம்? அதர்மமான தீர்ப்பை தர்மமென்று அழைப்பவர்கள் நீதிபதியாக வரும் பாக்கியம் பெற்ற நம்மை எப்படித்தான் புகழ்ந்து கொள்வது?

Edited and Published by B. Ranganatham. Mg. Editor R. Rajagopal 33Thiruvengada Mudali Street, Periamet, Madras 3. Printed by J. A. SILVIA at the "LIBERATOR" Press, 2-11, Mount Road, Madras 2.